இலவச வெளியீடு: GERMANY , ENGLAND ஆடி.July. 2016

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

மாபெரும்

தொடர் மலிவு விற்பனை!



விபரம் பக்கம் 10

தரமான தங்க நகைகளுக்கு

உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund

Tel: 0231/162377 Fax: 49.0231/147836



## அந்திம காலம்

டாக்டர் எம்.கே.முருகானந்தன் MBBS Cey

## கடலில் பயணிக்கும் விமானம்!

## ரோமியோ கண்டால் தாங்க மாட்டான்

## மாத்தி யோசி...

சேவியர்

T.T.S.Brothers GmbH&Co.KG

RHEINISCHE STR 52
44137 DORTMUND

Tel:0231 819288 விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்

சகல Alarmanlage, Überwachung Kamera,பொருத்துதல்..

Schevenhofer Weg 24,- 42111 Wuppertal

Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 24

டோட்முண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!

Gopara Gnanam Textiles & Jewellery Shop

Tel: 0231/5450028- Mob: 01713306542

Rheinische Str.81-- 44137 Dortmund

விபரம் 5ம் பக்கம்

Frankfurt:Tel:069 97 693 374

SARAVANAA BHAVAN

Lucky Fly

0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex

Tel.: 0231/8602696



என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

S.K.Silks & Gold Paraadise

மாபெரும் ராஜ முத்திரை

03.07.2016 ஞாயிற்றுக்கிழமை

கம் – காமாட்சி அம்மன் தேர்த் திருவிழாவில் எமது

மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!

புத்தம், புதிய, வரவுகளான எம்பிறோய்ட் சேலைகள் (Embroidery Sary)

மற்றும் திருமணப் பட்டுப்புடவைகள், அனைத்திற்கும் நாடுங்கள்.

தரம்! அதிக தேர்வு!! அனைத்தும், தங்களை அசத்தும்!!!

Tel:0231 9501 647

Adler str 33 - 44137 Dortmund

Mr.P.Sritharan.
Proprietor









# கடலில் பயணிக்கும் விமானம்

## பாதை மாறிய பயணமோ!

மாதவி

பணம் உழைப்பதற்கு பணமும் தேவை. அத்துடன் மதிநுட்பமும் தேவை. இது இரண்டும் ஒன்றாக அமைந்தால் வியாபாரம் கொடி கட்டிப்பறக்கும்.

ஓடும் பஸ்சை விட ஓடமுடியாத பழுதான பஸ்சை வைத்துக்கொண்டும், ஓடமுடியாத புகையிரதத்தை வைத்துக் கொண்டும், ஏன் பறக்க முடியாத விமானத்தை வைத்துக் கொண்டும் அவை பாவனையில் இருந்தபோது சம்பாதித்ததை விட பல மடங்கு சம்பாதிக்க வழிகள் உண்டு. அந்த வழிகள் தெரிந்து விட்டால் அவன்தான் சிறந்த மதிநுட்பமிக்க வியாபாரி. அவனுக்கு பணம் நடுவீட்டில் நீட்டி நிமிர்ந்து ஆசையுடன் அமர்ந்து கொள்ளும்.

உலகில் எத்தனையோ கடற்கரைகளை அண்டிய விடுதிகள் உண்டு. அங்கு உலகின் பெரும்பகுதி மக்கள் வருடம் தோறும் உல்லாசப்பயணம் செல்கின்றார்கள். கடலையும், கடற்கரையையும், உணவையும் வைத்துக்கொண்டு எல்லா விடுதிகளுடனும், போட்டி போட முடியுமா.?

சிந்தித்தார் மக்கோவன். விடுதிகளை வெறும் அழகான கட்டிடங்களாகவோ அல்லது பலரைப்போல் குடிசை களாகவோ அமைக்காமல். மக்களுக்கு வித்தியாசமான உணர்வை ஏற்படுத்தும் வண்ணம் அமைக்க முடிவு செய்தார். அதன் பிரகாரம் கடற்கரையயை ஒட்டிய 15 ஏக்கர் நிலப்பரபபில் புதுமையான விடுதிகள் அமைத்து மக்களைக் கவர்ந்தார்.

அங்கு பழுதான புகையிரப் பெட்டிகளை பல அறைகள் கொண்ட விடுதியாகவும், இரட்டைத்தட்டு பஸ்களை இருமாடி விடுதியாகவும், பழுதான படகுகளை அழகான விடுதியாகவும் மாற்றி அவற்றை வாடகைக்கு கொடுத்தார்.

தற்போது ஒரு படி உயர்வாக வானத்தில் 30 வருடங்களாக உயரப் பறந்து திரிந்த 159 அடி நீளமான விமானத்தை வாங்கி அதில் 8 பிரிவுகளாக அறைகளை அமைத்து சிறந்த விடுதியாக மாற்றி வருகின்றார்.

இப்படி தரையில், நீரில், ஆகாயத்தில், பறந்த அனைத்தையும் ஒரே இடத்தில் இல்லங்களாக மாற்றியதால், இரவு நேரம் பார்த்தால் நீர் நிலம் ஆகாயம் யாவும் ஒன்றானது போல் தோற்றமளிக்கும். உல்லாசக் கடற்கர விடுதி (Quirky Nights Glamping') 2016 சமருக்கு தயாரகிவிடும்.

அந்தப் பெரிய விமானத்தை தெருவால் கொண்டு செல்லமுடியாது. எனவே கடல்மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டது. அந்த மதிநுட்பத்தை பாருங்கள்.



08.05.2016 பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட 30 ஆண்டுகள் பழைமையான 50 தொன் நிறையுடைய போயிங் 767 விமானமொன்று அயர் லாந்தின் கொகிளேயர் எனும் இடத்திலிருந்து சிலிகோ (Sligo )பிராந்தியத்துக்கு கடல் மார்க்கமாக கொண்டு செல்லப்படுவதை படத்தில் காணலாம்.
இந்த பாவனையில் இல்லத பறக்க முடியாத விமானத்திற்கு செல்வந்தர் தொழிலதிபர் மக்கோவன் கொடுத்த பணம் 16,000 பவுண்காகும்.
அந்த விமானத்தை தரை வழியாக குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்வதனால்.....

தொடர்ச்சி 8ம் பக்கம்


வீட்டுக்கடன்
1,2%
01.06.2016
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/10876361
0152/53961138
Th. Gobinath



## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
————————கவிஞர்.வி.க

ஓசை 238



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd

Sanje:07824 61 83 83

vai g (U.K) 00 44 7788 195962


# வட,கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படுமாம்!

வட,கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படும்: அரசாங்கம்

வடக்குக் கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அரச படையினரை அகற்றிக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் நிறைவேற்றப்படும் என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கிலிருக்கும் இராணுவத்தை வெளியேற்றும் நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமெரிக்காவின் அனைத்துக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்த தூதுவர் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அடுத்துவரும் இரண்டு வருடங்களுக்குள் இராணுவம் அகற்றிக்கொள்ளப்பட்டு தேவைக்கு ஏற்றளவு படையினர் மாத்திரம் நிலைநிறுத்தப்படுவர் என்றும் பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அமெரிக்காவிற்கான தூதுவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உரையாற்றிய இலங்கையின் இன மற்றும் மத சுதந்திரத்திற்கான அமெரிக்க காங்கிரஸ் குழுக் கூட்டத்தை டெனி டேவிஸ் மற்றும் பில் ஜொன்சன் ஆகிய காங்கிரஸ் உறுப்பினர்களால் வழிநடத்தப்பட்டது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் உட்பட அரச படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்து ஒன்றரை வருடங்கள் கடந்தும் வடக்கு கிழக்கில் அரச படையினரால் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணிகளில் 70 வீத மானவை இன்னமும் படையினர் வசமே இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த மேடையில் குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலளித்த இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் வடக்கை விட அதிகமான காணிகள் கிழக்கில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகக் கூறிய அவர் எனினும் அந்தப் பணிகள் மந்தமாகவே இடம்பெறுவதாகவும் ஏற்றுக்கொண்டார்.

எனினும் இதனை நிராகரித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இராணுவம் தொடர்ந்தும் சுற்றுலா விடுதிகள்



விவசாயப் பண்ணைகளை நடத்தி பொருளாதாரத்திற்கு பங்கம் விளைவித்து வருவதாக குற்றம்சாட்டினார்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் யோசனைகளுக்கு அமைய அரசாங்கம் அரச படைக் கட்டமைப்பில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்த அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச படைக் கட்டமைப்பை மறுசீரமைப்பதற்காக உண்மை நீதி மற்றும் மீண்டும் மோதல்கள் ஏற்படாத வகையில் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி பெப்லோ டி கிறிப்பின் ஆலோசனைகளை பெற நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சட்டக் கட்டமைப்பு இராணுவம் பொலிஸ் மற்றும் புலனாய்வுத்துறை ஆகியன பாரியஅளவில் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதி பெப்லோ டி கிறீப் கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் போது வலியுறுத்தியிருந்தார்.

எவ்வாறாயினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலான முன்வைக்கப்பட்ட யோசனைகளை படைத்தரப்பினரின் கடும் எதிர்ப்பை அடுத்து அரசாங்கம் கைவிட்டுள்ளதாக தெரிவித்த சுமந்திரன் புதிதாக அரசாங்கம் கொண்டுவரவுள்ள சட்டங்கள் படையினரை திருப்திப்படுத்துவதாகவே அமையும் என்றும் சாடியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக முன்வைக்கப்படும் சட்டமூலம் உட்பட மேலும் மூன்று சட்ட மூலங்கள் யூன் மாத இறுதிக்குள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த பிரசாத் காரியவசம் எனினும் அந்த சட்டங்களின் உள்ளடக்கங்கள் குறித்து தனக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை முன்னெடுத்து வருவதாக குற்றம்சாட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனால் குடிப்பரம்பல் மோசமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் பொறுமையின் எல்லைக்கே வந்துவிட்டதாகவும் தெரிவித்த அவர் இந்த நிலை தொடர்ந்தும் நீடிக்காது என்றும் சுமந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார். நன்றி: உதயன்







# ஹரம்பி

## உண்மைக் கதை

குரு அரவிந்தன் –

அந்த செய்தி என்னை மிகவும் பாதித்திருந்தது. ஒரு கணம் கணினித் திரையைப் பார்த்தபடி உறைந்து போயிருந்தேன். காரணம் நேற்றுதான் ஹரம்பிக்கு ஒரு லைக் போட்டு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தேன்.

முகநூலில் 17 வது பிறந்த நாள் என்பதால் ஹரம்பியின் அழகான படத்தைப் போட்டு ஒரு லைக் போடுங்கள் என்று முகநூலில் பதிவு செய்திருந்தார்கள். சென்ற வருடம் "ஸ்வீட் ஸிக்டீன்" என்று 16 வது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடிய புகைப்படங்களும் அந்த முகநூலில் இடம் பெற்றிருந்ததைக் கவனித்தேன். ஸ்வீட் ஸிக்டீனைக் கடந்து சென்ற ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாதது அந்த நாள் என்பதால் ஹரம்பிக்கும் மறக்க முடியாத நாளாக அது ,இருந்திருக்கும்.

வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தை நோக்கிய நகர்வு இங்கேதான் அனேகமானவர்களுக்கு ஆரம்பமாகின்றது. ஏனோ முகநூலில் பார்த்த ஹரம்பியின் அந்த அப்பாவித் தனமான பார்வையில் ஏதோ ஒரு சோகம் குடியிருப்பதை அவதானிக்க முடிந்தது. ஒருவேளை ஹோம்சிக் என்று எல்லோரும் சொல்வது போல உறவுகளைப் பிரிந்து, இயற்கைச் சூழலை விட்டு ,இங்கே வந்த சோகமாகக்கூட அது ,இருக்கலாம்.

ஹரம்பியின் ,இந்த சிறை வாழ்க்கை எத்தனை வருடங்களாகத் தொடர்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ,இப்படி ஒரு சிறையில் அடைத்து வைக்குமளவிற்கு ஹரம்பி எந்த ஒரு குற்றமும் செய்திருக்க நியாயமில்லை என்பதைக் குழந்தைத் தனமான அந்த முகத்தைப் பார்த்த போதே நான் புரிந்து கொண்டேன். ரெக்ஸாசில் சுதந்திரமாய் திரிந்த ஹரம்பியை அந்தச் சிறைக்குக் கொண்டு வந்ததற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் ,இருக்கலாம், ஒருவேளை அனாதையாகக் கைவிடப்பட்ட நிலையில் ,இருந்திருக்கலாம்.

ஆனாலும் முதல் நாள் பார்த்த போதே எனக்குக் ஹரம்பியைப் பிடித்துப் போய்விட்டது.

ஒரு நிமிடத்தில் எல்லாமே தலைகீழாக மாறியிருந்தது. மார்க்கண்டேயருக்குப் பதினாறு வயதுபோல, ஹரம்பிக்குப் பதினேழு வயதிலே தத்து என்று தலையில் எழுதப்பட்டிருக்கலாம்.

நான்கு வயதுதான் இருக்கும், யமதூதுவன் போல அந்தச் சிறுவன் பெற்றோருடன் அங்கு நுழைந்திருந்தான். செயற்கையாகப் போடப்பட்ட பாதுகாப்பு வேலிபோலப் பதினைந்தடி ஆழத்தில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த அந்தக் காட்சிதான் அவன் கண்ணில் முதலில் பட்டது.

தண்ணீரைக்கண்டதும் தானும் தண்ணீரில் விளையாடப் போவதாக அவன் அடம் பிடித்தான். தாயார் என்ன சொல்லியும் கேட்காமல் பிடிவாதமாகத் தாயாரின் கைகளை உதறிவிட்டு அந்த இடத்திலே தரையில் உட்கார்ந்து கொண்டான். தாயார் சற்று விலகியதும் எழுந்து ஒரே ஓட்டமாக ஓடி மேலே போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியையும் கடந்து திடீரெனக் கீழே குதித்தான்.

ஒரே நிமிடந்தான், என்ன நடக்கிறது என்று தெரியாமல் பார்வையாளர்கள் எல்லோரும் உறைந்து நின்றனர். கீழே விழுந்த சிறுவன் அடிபட்டதால் அப்படியே மயக்கமாகக் கிடந்தான். பதினைந்தடி ஆழமாகையால் கீழே விழுந்த போது சிறுவனின் உடம்பில் அடிபட்டிருக்கலாம். சில நிமிடங்கள் மயக்க நிலையில் அசையாமல் அப்படியே அவன் கிடந்தபோதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது. சற்றும் எதிர் பார்க்காத நேரத்தில் கீழே இருந்த இரண்டு பெண் கொரிலாக்கள் அந்தச் சிறுவனை நோக்கி வேகமாக ஓடிவந்தன.

மேலே நின்ற கும்பல் ஓவென்று கூக்குரலிட, இதைக்கண்ட ஹரம்பி ஓடிச்சென்று அந்தக் கொரிலாக்களைத் தள்ளிவிட்டு கீழே மயங்கிக் கிடந்த அந்தச் சிறுவனைக் குனிந்து பார்த்தது.

மற்றக் கொரிலாக்களால் ஆபத்து வரலாம் என்று நினைத்தோ என்னவோ, தனது காதலிகளான அந்த ,ரண்டு கொரிலாக்களையும் சற்றுத் தூரம் வரை விரட்டிவிட்டுப் பொறுப்புள்ள ஒரு தகப்பனைப் போல சிறுவனுக்கு அருகே வந்து பாதுகாப்பாக நின்று கொண்டது.

மயக்கம் தெளிந்த சிறுவனின் கண்களில் எதிரே பூதாகரமாய் நின்ற ஹரம்பிதான் கண்ணில் படவே, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாத சிறுவன் ஓவென்று பலமாக அழத் தொடங்கினான். இதைப் பார்த்துக் கொண்டு வெளியே நின்ற மக்கள் கூட்டம் என்ன நடக்கப் போகிறதோ என்ற பதட்டத்தில் மீண்டும் கூக்குரலிட்டது. அவர்கள் கும்பலாகக் கீழே வந்து அந்தச் சிறுவனைத் தாக்கி விடுவார்களோ என்ற பயம் ஹரம்பியைச் சட்டென்று பிடித்துக் கொண்டது.

மேலே நின்று கத்திக் கூக்குரலிடும் அந்தக் கும்பலின் சத்தம் மேலும் மேலும் அதிகரிக்கவே, அவர்கள் எந்த நேரமும் கீழே வந்து சிறுவனைத் தாக்கலாம் என்ற பயத்தில் ஹரம்பி மேலே அண்ணார்ந்து பார்த்தது.

சிறுவனை அந்தக் கும்பலிடம் இருந்து பாதுகாக்க வேண்டுமானால் இதற்கு ஒரே வழி அந்தச் சிறுவனை ஒதுக்குப் புறமாகக் கொண்டு சென்று கூக்குரலிடும் மக்களிடம் ,ருந்து பாதுகாப்பதே என்று அது நினைத்தது. ஐந்தறிவு படைத்த அந்த மிருகத்திற்கு அதைவிட வேறு எதுவும் யோசிக்கத் தோன்றவில்லை. தனது குட்டிகளை எப்படிப் பாதுகாக்குமோ அப்படித்தான் அது செய்ய நினைத்தது.

ஆனால் மிருகம் ஒன்று நினைக்க மனிதன் ஒன்று நினைத்தான். ஹரம்பியால் சிறுவன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என மிருக்காட்சிச் சாலைப் பணியாளர்கள் நினைத்தார்கள். ஆனால் ஹரம்பியோ எந்த ஒரு கட்டத்திலும் சிறுவனைத் தாக்கவோ, பயமுறுத்தவோ முற்படவில்லை. மாறாகச் சிறுவனைப் பாதுகாக்கவே நினைத்தது. எனவே சிறுவனைத் தூக்கித் தனது காலடியில் இருத்திவிட்டு அவனைப் பாதுகாப்பதில் கவனமாக இருந்தது. பாதுகாப்பான ஒரு மூலையில் சிறுவனை உட்கார வைத்தால் மக்கள் கூட்டம் சிறுவனைத் தாக்க மாட்டார்கள் என ஹரம்பி நினைத்து. எங்கே சிறுவனைப் பாதுகாப்பாய் வைக்கலாம் என்று அக்கம் பக்கம் பார்த்தது.

ஹரம்பி சுமார் 400 கிலோ எடை ,ருக்கலாம். நெட்டையான உருவம். சுமார் ஐந்தரையடி உயரமிருக்கலாம். நடக்கும் போது அசைந்து அசைந்து நடப்பதே அதற்குத் தனி அழகைக் கொடுத்தது. மேலே நின்று கத்திக் கூக்குரலிட்டவர்கள் அந்தச் சிறுவனைத் தாக்க முனைந்ததால்தான் அவர்களிடம் இருந்து தப்புவதற்காகத்தான் சிறுவன் கீழே தண்ணீருக்குள் குதித்தான் என்று ஹரம்பி நினைத்ததிருக்கலாம். அந்தக் கும்பலிடம் ,ருந்து சிறுவனைக் காப்பாற்ற சட்டென்று தண்ணீருக்குள் ,இருந்த சிறுவனை அணைத்துத் தூக்கி நிற்க வைத்தது.

சிறுவனைத் தூக்கி நிற்க வைத்த ஹரம்பிக்குச் சிறுவனை இரண்டு கைகளாலும் அணைத்துத் தூக்கி தோளில் போடத் தெரியவில்லை. தனது குட்டியை எப்படிக் கையில் பிடித்து அழைத்துக் கொண்டு செல்லுமோ அப்படித்தான் சிறுவனைப் பிடித்து கொண்டு சென்றது. கீழே விழுந்து முழங்காலில் அடிபட்டதால் சிறுவனால் நடக்க முடியாமலிருந்தது.

மீண்டும் தண்ணீருக்குள் விழுந்த சிறுவனை என்ன செய்யலாம் என்று ஒரு கணம் யோசித்தது.

தொடர்ச்சி 19ம் பக்கம்




லூர்ட்ஸ் மாதா – போத்துக்கல் பார்த்திமா

july, Aug , மாதங்களில்
எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
மற்றும்
போத்துக்கல் பாத்திமாகோவில்
இவற்றிற்கு பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

புனிதப்பயணம்
போத்துக்கல்–(பார்த்திமா )

லூர்ட்ஸ் மாதா கோவில்
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89



ஜூலை 3ஆம் தேதி GERMANY HAMMல் நடைபெறும்
ஸ்ரீகாமாக்ஷி அம்மன் திருவிழாவில்
VIJAY டிவியின் மாபெரும் சலுகைகள்.
VIJAY TV SUBSCRIPTION CARD
SPECIAL PRICE
€64.99
VIJAY TV SUBSCRIPTION CARD
NORMAL PRICE
€74.99
10 EURO DISCOUNT ON VIEWING CARD
இந்த திருவிழாவில் விஜய் டிவி வியூயிங் கார்டை
10 ஈரோ தள்ளுபடியில் பெற்றிடுங்கள்.
STALL NO
44
இச்சலுகை ஜூலை 3ஆம் தேதி மட்டுமே!
* Terms & Conditions Apply.
Authorised Dealer:
Asiatischer Supermarkt, HÜCKELHOVEN Germany - Tel: 024334469007
Asia Samuthiram, Mönchengladbach Germany - Tel: 021619028388



முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum
Lucky Fly Reisebüro
என்றும் மலிவான விலையில்
தரமான சேவையை வழங்குவது
Lucky Fly Reisebüro
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Allee Str.38-40a
44793 Bochum
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
துரித பணமாற்றுச் சேவை!!!
MoneyGram
WESTERN UNION WU
moving money for better








# சிற்றுண்டிகள்








யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உணவு வகைகளோடு சிற்றுண்டிப் (பலகார வகை) பயன்பாடும் வழக்கத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவற்றின் பாகமுறை பற்றியோ பண்டங்கள் விபரம் பற்றியோ விளக்க வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்திலே தோன்றிய இலக்கியங்கள் பல இச்சிற்றுண்டி வகைகளைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. வகைமாதிரிக்குக் "காதலியாற்றுப் படையில்" வரும் ஒரு சில அடிகளைச் சுட்டிக்காட்டலாம்.




விட்டுக் கள்ளினை விளைபத மெய்து நெல்
மாவினிற் சுட்ட வண்புளிச்சப்பமும்........
அருவிலை கொடுத்தே அரக்கு மாந்தும்
மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக
வளமுற உதவும் வடையின் கடகமும்
முறுக்கு, நல்வாய்ப்பன் மோதகம் இட்லி
எள்ளுக் கட்டியும்

இவற்றிலே சில இன்று அருகிப் போய்விட்டன. சிற்சில பிரதேசங்களுக்கெனச் சில சிற்றுண்டி வகைகள் சிறப்பானவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாகப் "பருத்தித்துறை வடை" என்பதனைக் குறிப்பிடலாம். உலகெங்கும் பருத்தித்துறை வடை என வழங்கும் இந்த வடையை வடமராட்சிப் பிரதேசத்திலே "கள்ளுவடை" என்றே அழைத்தனர். அதனையே "அரக்கு மாந்தும் மாந்தர் வாய்க்கு வெங்கறிப்பாக உதவும் வடை" என்று பேராசிரியர் குறிப்பிட்டார். (அரக்கு -arracku, சாராயம்) பின்னர் சற்று நாகரிகமாகத் "தட்டை வடை" என அழைத்தனர். இவ்வுணவுப்பொருளின் பெயர் கூட ஒரு சமூகப் பண்பாட்டின் அடையாளமாகப் புலப்படுவது கவனிப்புக்குரியது.

இன்றும் வடமராட்சிப் பகுதியிலே பல்வேறு வகையான அப்பவகைகளும் (பால் அப்பம், புளிச்சப்பம் வெள்ளை அப்பம் முதலியன) வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எள்ளுப்பாகு வடமராட்சிப் பகுதிக்குரிய சிறப்புத் தின் பண்டமாக உள்ளது பருத்தித்துறை அக் காலத்திலே புகழ் பெற்ற ஒரு துறைமுகமாக இருந்தது. வெளிநாடுகளில் இருந்து வரும் கப்பல்கள் (பாய்க்கப்பல், வத்தை, வள்ளம் முதலியன) கொண்டு வரும் பண்டங்களை இறக்கும் தொழிலாளர்கள் கப்பல்களில் வரும் வேற்றுநாட்டுத் தொழிலாளர்கள் முதலியோரை மனங்கொண்டு பருத்தித்துறையிலே தோசை, வடை, பலகாரம் முதலியவற்றை விற்பனை செய்யும் சிறுசிறு சிற்றுண்டிக்கடைகள் மிக அண்மைக்காலம் வரை இருந்தன. இன்றும் சிறுபான்மையாகச் சில உண்டு. சிலப்பதிகாரத்துக் கடவாடு காதையிலே வரும் பின்வரும் பகுதியைப் பருத்தித்துறைத்துறைமுகத்துடன் ஒப்பு நோக்கலாம்:


பண்வியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
காழியர் மோதகத் தூமுறு விளக்கமும்
கூவியர் காரகற் குடக்கால விளக்கமும்
நொடை நவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்

பலகாரவகைகள், பிட்டு, அப்பம் முதலானவை புகாரிலே விற்கப்படுவதாகச்

## யாழ்ப்பாணப் பண்பாடு

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



சிலப்பதிகாரம் குறிப்பிடுவதைப் பருத்தித்துறையில் வழங்கும் உணவுப் பண்பாட்டின் ஒப்பு நோக்கி மகிழலாம். எள்ளுப் பிண்ணாக்கினைப் பனங்கட்டியுடன் சேர்த்து உண்ணும் வழக்கும் இருந்தது. துப்புரவு செய்யப்பட்ட பிண்ணாக்கு இன்றைக்கு 40 - 50 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### எண்ணெய் வகைகள்

எள்ளில் இருந்து எடுக்கப்படும் நல்லெண்ணெய் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலோடு ஒன்றிணைந்த உணவுப்பண்டமாகும். இன்றும் நல்லெண்ணெய்ப் பாவனை மிகவும் முக்கியமானதாகவே உள்ளது.

நல்லெண்ணெய் மாத்திரமன்றித் தேங்காய் எண்ணெயஇ இலுப்பெண்ணெய்இ வேப்பெண்ணெய் முதலியவற்றை உணவுக்காகவும் மருந்துக்காகவும் பயன்படுத்தினர். இலுப்பெண்ணெய் விளக்கு எரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்கள் இலுப்பெண்ணெய் விளக்கிலே படித்ததாகக் கூறப்படுவதும் இவ்விடத்திலே சுட்டிக்காட்டத்தக்கது.

### பானவகைகள்

காலனித்துவ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலை கோப்பிக்கு முன்னர் பால்இ மோர்இ பழங்கஞ்சிஇ பதநீர் முதலியன இப்பிரதேச மக்களின் பான வகைகளாக இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய இளம் தலைமுறையினர் "பழங்கஞ்சி" என்றால் என்ன? என்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது இன்று மறைந்து விட்டது. நாங்கள் மறந்தும் விட்டோம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய குழந்தைப்பாடல் ஒன்றில் (இது ஈழத்துப்பாடல் என்று கூறப்படுகின்றது)

அம்மா மெத்தப் பசிக்கிறது
அப்பம் இரண்டு இப்போ தா
தந்தால் உடனே பசி தீரும்
தாகம் தீர மோருந் தா

அப்பம் மோர் ஆகியவற்றின் முக்கியத்துவம் இவ்வாறு பேசப்படுவதையும் சுட்டிக்காட்டலாம்.
பழங்கள்

தொடர்ச்சி 06 ம் பக்கம்...






## சிற்றுண்டிகள்

5ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மா, பலா, வாழை, வெள்ளரி, வத்தகை முதலான பழவகைகள் இருந்தன. இன்றும் இருக்கின்றன. யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவை பற்றிப் பலரும் விதந்து கூறுவர். குறிப்பாகத் தென்னிலங்கையில் யாழ்ப்பாண மாம்பழத்திற்குத் தனியானதோர் மதிப்பு இன்றும் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாண மாம்பழத்திற்கு இருந்த மதிப்புப் பற்றிக் கவிஞர் சச்சிதானந்தன் பின்வருமாறு பாடியுள்ளார்.



நீதி பிழைப்பிக்கும் நேர்மை தவறுவிக்கும்
பாதிப் படிப்பில் பதவி தரும் -ஏதுக்கும்
ஓம்பட்டிசைவிக்கும் ஒன்றன்றோ யாழ்ப்பாண
மாம்பழத்துத் தீஞ்சுவையின் மாண்பு

வெறுமனே நகைச்சுவையாக மாத்திரமன்றி யாழ்ப்பாணத்தவர்கள் மாம்பழத்தைப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்திய பாங்கும் இப்பாடலின் உட்பொருளாகப் பொதிந்திருப்பதைக் கண்டு கொள்ள முடிகின்றது.

### கிழங்கு உணவுகள்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட கிழங்கு வகைகளாக மரவள்ளிஇ இராசவள்ளி, மோதகவள்ளி, மயிர்வள்ளி (கொட்டி) வத்தாளை, சட்டிக்கறணை முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிலே மரவள்ளிக் கிழங்கு மிகவும் பிரதானமானதாகும். இப்பிரதேசமக்கள் மரவள்ளிக்கிழங்கைப் பலவகையாகப் பாகம் பண்ணிப்(அவித்துஇ கறியாகஇ மரவள்ளிமாவாக) பயன்படுத்தினர். மரவள்ளி யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் அதிக விளைச்சலைத் தந்தமை குறிப்பிடத்தக்கது. மரவள்ளிக் கிழங்கைச் "சவாரிக்கட்டை" என வழங்கும் வழக்காறும் இருந்தது.





யாழ்ப்பாணத்து இராசவள்ளிக் கிழங்குக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியேயும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. இருக்கிறது. காலனித்துவ காலத்தில் மேலைப்புலத்தவர்களும் இக்கிழங்கை விரும்பி உண்டதாகக் கூறப்படுகிறது. இராசவள்ளிக் கிழங்குக்குத் தேங்காய்ப்பால் விட்டு அவித்துச் சீனி அல்லது சர்க்கரை அல்லது பனங்கட்டி போட்டுக் களியாகக் கிண்டி விருந்துகளிற் கூடப் பரிமாறப்பட்டது. இன்றும் சிறுபான்மையாக இவ்வழக்கம் இருக்கிறது.

வத்தாளைக் கிழங்கு குறிப்பிட்ட ஒரு பருவ காலத்திலேயே பயிரிடப்படும். இனிப்புத் தன்மையுள்ள இந்த வத்தாளைக் கிழங்கினை ஒல்லாந்தரும் ஆங்லேயரும் "இனிப்பு உருளைக்கிழங்கு" என்று அழைத்ததாக அறிய முடிகிறது.

மயிர்வள்ளிக் கிழங்கினைக் கொட்டிக்கிழங்கு என்றும் கூறுவார்கள். கொட்டிக்கிழங்கை அவித்து உரித்துச் சாப்பிடுவது மிகவும் கடினம். இது பற்றி ஒருநாட்டுப் பாடலே உண்டு.



கொட்டிக் கிழங்கெண்டு பெட்டி எடுஎண்டாக்
கோவிச்சுக் கொண்டாராம் பண்டாரம்
அவிச்சு உரிச்சு முன்னாலை வைக்கச்
சிரிச்சுக் கொண்டாராம் பண்டாரம்

கொட்டிக் கிழங்கை அவித்து உரித்துச் சாப்பிடுவதிலுள்ள சிரமத்தினையே இப்பாடல் புலப்படுத்துகிறது.





சட்டிக் கறணைக் கிழங்கு கறியாகச் சமைத்துச் சாப்பிடப் பயன் படுத்தப்பட்டது. (இதுமருத்துவக் குணம் நிறைந்தது என்று கூறப்படுகின்றது. சட்டிக்கறணையை "கறணைக் கிழங்கு" என்றும் அழைக்கும் வழக்காறும் உண்டு. யாழ்ப்பாணத்து மண்வளம் பொதுவாகக் கிழங்குவகை உற்பத்திக்கு மிகவும் உகந்தது. எனப் புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்)

இன்று மறைந்து போன, மறந்து போன உணவு வகைகள் இன்னும் பலவுள. பாரம்பரிய உணவுகளின் இடத்தை இன்று "கேக்", "பற்றீஸ", "ஐஸ்கிறீம்' முதலானவை ஆக்கிரமித்து ஆட்சிபுரிகின்றன. பழையன கழிதல் சரி, பழையன கழித்தல் சரியா?





## நன்றி நவிலல்

### மதன் தீபனா தம்பதிகள்




யேர்மனி -டோட்மூண்ட் நகரில் 11.06.2016 சனிக்கிழமை எங்கள் திருமண வரவேற்பு விருந்துபசார நிகழ்வில் கலந்து சிறப்பித்த, உற்றார், உறவினர், நண்பர்கள்,அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்
அன்புடன் **மதன் – தீபனா** தம்பதிகள்

திரு,திருமதி மகாலிங்கம் குடும்பத்தினர்
Eschborn -Germany

திரு,திருமதி ஈஸ்வரகுமார் குடும்பத்தினர்
Dortmund -Germany


Lakshmi Jewellery &Silks





Wilhelm Str.09
33602 Bielefeld

03.07.2016
ஞாயிற்றுக்கிழமை

கம் – காமாட்சி அம்மன் தேர்த் திருவிழாவில்

மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!

பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள்
இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் மிக மிக மலிவு விலையில்
கிடைக்கும்

Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729



# ஆண்கள் கண்பட்ட இடம் ஒளிர்கிறதோ!
## ரோமியோ கண்டால் தாங்க மாட்டான்!

மாதவி



படம்:வெற்றிமணி

இத்தாலி நாடு என்றதுமே கண்ணுக்குள் விரிவது ரோமானிய சிற்பங்கள், மாபெரும் கலை அரங்கங்கள், மற்றும் பெரும் கட்டிடங்கள்!
கட்டிடங்கள் வானை முட்டுவது மட்டுமல்ல, எம்மை மலைக்கவும் வைக்கும். தொழில் நுட்பமும், மதி நுட்பமும், இவை இணர்டும் இணைந்து மிரட்டும் கட்டிடங்கள். நகரங்களைச் சுற்றி பாதுகாப்பு மதில்கள். சில இடங்களில் அரண்மைனையைச் சுற்றி நதிகள்.
ஒவ்வொரு சிற்பங்களிலும் ஆண்மையும், பெண்மையும் உயிர் பெற்ற நிற்கும். உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள், சிற்பக்கலைஞர்கள், கட்டிடக்கலைஞர்கள் தோன்றிப் புகழ்சேர்த்த மண்ணது. இற்றைக்கு 400 வருடங்களுக்கு முன் வடித்த சிலைகள் எதோ காலையில்தான் வடித்து முடித்தவை போன்று புதுப் பொலிவுடன் நிற்கின்றன.
மைக்லாஞ்சி லோ, லியோனோ டாவின்சி, இவர்கள் இறந்து விட்டார்கள் என்று யார் சொன்னது. அவர்கள் சாகாவரம் பெற்றவர்கள். ரோம் நகரம் இன்றும் அழகுற இருப்பது வியப்பாக உள்ளது. பரலோகம் செல்லும் முன் ஒவ்வொரு மனிதனும் பார்க்கவேண்டிய நகரம் ரோம்.

தஞ்சையில் ராஜராசோழன் காலத்து பெரும் கோவிலும், அதன் உள் சுற்றுவட்டமும் எவ்வாறு நுட்பமாக அமைக்கப்பட்டதோ அதே போன்று பல கட்டிடங்கள் இத்தாலியிலும் அமைந்து இருக்கின்றன.


என்ன ஒரு வித்தியாசம்! அங்கு கால்வைக்க முடியாதபடி சுற்றாடல் அமைந்திருக்கும். இங்கு கால்வைக்க கூசும் அளவிற்கு சுற்றாடல் அழகாக இருக்கும்.
ஆனந்தவிகடன் மணியன், பயணக்கட்டுரை எழுதுவதில் வல்லவர். அக்காலத்தில் அவரது கட்டுரைகள்தான் கூகுள் போல் இருந்தன. இப்போ பயணக்கட்டுரை எழுதுவது அன்றுபோல் இல்லை. காலத்திற்கு ஏற்ற மாற்றம். இருந்தாலும் கூகுளுக்கும் பிடிபடாத சில சமாச்சாரங்களை இங்கு சொல்ல விரும்புகின்றேன்.

ரோமியோ யூலியட்.
ஆண்கள் கண்பட்ட இடம் ஒளிர்கிறதோ!
ரோமியோ கண்டால் தாங்க மாட்டான்!



செக்ஷ்பியர் வடித்த காதல் காவியம். இன்று இத்தாலி நகரத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை, ரோமி யூலியட் வாழ்ந்த இடத்தை தேடி அலையவைக்கின்றது.







படம்:வெற்றிமணி

சில சமயங்களில் ஒரு பொய்யாவது சொல் கண்ணே என்று நாம், கெஞ்சவேண்டியும் உள்ளது. ரோமியோ வாழ்ந்த வீடும், யூலியட் வாழ்ந்த வீடும் இது இதுதான் என்று ( Verona நகரத்தில்) ஒருவாறு இனம்காணப்பட்டுவிட்டது. அதனால் அப்பகுதி செல்வம் கொழிக்கும் நகரமாக மாறி விட்டது. வருடம் 60 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அந்த காதலர் வீட்டை தரிசிக்கவருகின்றனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்



7ம் பக்கத் தொடர்ச்சி

## ரோமியோ கண்டால் தாங்க மாட்டான்!



சுற்றுலா சிறப்பாக இருக்க. காதலர் வீடுகளுடன் மட்டும் நிற்காமல் யூலியட்டுக்கு ஒரு செப்புச் சிலையும் வைத்துவிட்டனர்.

சுற்றுலாப்பணிகள் விடுவார்களா? எங்கே பல்கனி! ரோமியோவும், யூலியட்டும் களவாகக்காதல் புரிந்த அந்த பல்கனி எங்கே! இதோ தென்னைமரத்தில் பிள்ளையார் வருகிறார் என்று பாலுற்றிய எமக்கு இவர்கள் காட்டும் அற்புதம் புதுசா என்ன?
1930 ஆண்டு பல்கனி ஒன்றை இரவோடு இரவா அமைத்து முடித்தனர். இப்போ கதை நிஜமானது.

அடுத்து யூலியட் அழகியின் அற்புதமான அழகுச் சிலை. பார்பவர்களுக்கு அந்த அழகியுடன் அருகில் நின்று ஒரு படம் எடுத்தால், என்ன என்று தோன்றும், அத்தனை அழகு ஓவியம் யூலியட். பார்பவர்கள் படம் எடுப்பதுடன் மட்டும் நின்றால் போதும்.ஆனால்...

நாம் அம்மன் சிலை இருந்தால் காலைத் தொட்டு வணங்குவோம். மாரியாவின் சிலை இருந்தாலும் காலைத் தொட்டுத்தான் வணங்குவோம். தெய்வம் பெண் இவை இணர்டும் ஒன்று என்ற எண்ணம் எல்லா இனத்தவருக்கம் உண்டு. செப்புச் சிலையில் அமைந்த அம்மனும், மரியாவும் பக்கதர்கள் அடிக்கடி பாதங்களைத் தொடுவதால் பாதம் தங்க நிறம் போல் பள பளக்கும்.

ஆனால் இங்கு யூலிட் அழகியின் செப்புச்சிலையில் பளபளத்தது பாதங்கள் அல்ல. அவளது மார்பும்,கையும் மட்டுமே.

காரணம் சொன்னார்கள். ஆண்கள் யூலியட்டின் மார்பை பிடித்து படம் பிடிக்கிறார்கள். பெண்கள் அவளது கரங்களைப்பற்றி படம்பிடிக்கின்றார்கள் என்று. இப்படிப் பார்த்தால் நாளை இன்னும் பிரகாசமாக யூலியட் திகழப்போகின்றாள். காரணம் இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் ஒரு பத்துப்போருக்கு ஒரு கமரா இருந்தது. இப்போ ஒருவரிடம் பத்துக்கமரா உள்ளது. அது மட்டுமல ஒரு கமராவால் 24,36 படங்கள் எடுத்த காலம் மாறி, ஆயிரம், ஆயிரம், என்று எடுக்கும் காலாமாய்ப் போச்சு!

உலகிலேயே காதலர்கள் செல்பி அதிகம் எடுக்கும் இடமாக அவ்விடம் உள்ளது. ரோமியோவிற்கு பின் புறத்தில் பல காதல் கடிதங்கள் எழுதி வைத்துள்ளனர் காதல் நிறைவேறினால் அங்கு மீண்டும் சென்று செல்பி எடுப்பார்கள். இல்லை என்றால் புதிய காதலுடன் சென்று மீண்டும் விண்ணப்பம் கொடுப்பார்கள்.
சரி ஆண்கள் மட்டும் என்ன அவ்வளவு மட்டமானவர்களா. ஒரு சிலை என்று தெரிந்தும் மார்பைபிடித்து இரசிக்க. நல்ல வேளை ரோமியோவிற்கு அங்கு சிலை இல்லை. இப்படி அங்கு சொன்னது ஒரு ஆண் அல்ல ஒரு பெண்தான்.! இன்று பெண்களும் ஆண்களும் சமன் அதனால் ஒரு பெண் யூலியட்டுடன் படம் எடுத்துக்கொள்கிறாள். கரங்கள் மனம் ஒரு குரங்காக...(படம் மேலே பார்க்கவும்)

2ம் பக்கத் தொடர்ச்சி

## கடலில் பயணிக்கும் விமானம்

அந்த விமானத்தை தரை வழியாக குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்வதனால் அது வீதியிலுள்ள மின் இணைப்புகளுக்கு சேதம் விளைவிப்பதுடன் பெரும் போக்குவரத்து நெரிசலையும் ஏற்படுத்தும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் மேற்படி விமானம் 750 தொன் பாரந்தூக்கி உபகரணமொன்றின் மூலம் பாரிய கப்பல் கட்டமைப்பில் வைக்கப் பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அந்த படகுக் கட்டமைப்பு உரிய இடத்தைச் சென்றடைய 36 மணி நேரம் தேவைப்பட்டது.
ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும். என்பது தற்போது விமானமும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்றாகிவிட்டது.




பழுதடைந்த பஸ், பழைய புகையிரதப் பெட்டி, இவையாவும் இலங்கையில் என்றோ ரெயில் பெட்டிகள் தெரு ஓரக்கடைகளாகவும், ஏழைகளின் வீடாகவும் மாற்றப்பட்டு இருந்ததை நம்மில் பலர் கண்டு இருப்பார்கள். அதிகமாக மலை நாட்டுப்பகுதிகளில் விபத்துக்குள்ளான புகையிரதப் பெட்டிகள் இன்றும் தெரு ஓரக்கடைகளாக இருப்பதைக் காணலாம். அங்கு மதி நுட்பம் உண்டு. ஆனால் பணம் இல்லை.

## நன்றி நவிலல்




ஜனகன் வான்மதி தம்பதிகள்கடந்த 17.06.2016 வெள்ளிக்கிழமை யேர்மனி சுவற்ரா நகரில் ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற எங்கள் திருமணவிழாவிலும் மறுநாள் இடம்பெற்ற விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பித்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும்

எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

**ஜனகன் வான்மதி தம்பதிகள்**

திரு மகேந்திரன் குடும்பத்தினர்
Backnang Germany

திருமதி.பொன்னையா குடும்பத்தினர்
Herne Germany






## மரணத்தை நெருங்குபவர்களைப் பராமரித்தல்

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

'சாவா எனக்கா' என இந்தக் கேள்வியைக் கேட்டதும் பயந்துவிடாதீர்கள். அல்லது 'எனக்கு வயசு கொஞ்சம்தானே. இதை பற்றி யோசிக்க இன்னமும் கன காலம் கிடக்கு' என்று சொல்லி விடயத்தை விட்டு நழுவி ஓடப் பார்க்காதீர்கள். எல்லோரும் அறிய வேண்டிய விடயங்கள் பற்றியதுதான் இக்கட்டுரை.

மரணத்தைத் தள்ளிப் போடும் வழி வகைகள் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுத் தகவல்கள் அவ்வப்போது வெளிவருகின்றன. ஆனால் அவை எதிலும் திடமான முடிவுகள் எதுவும் கிட்டவில்லை. மாறாக எந்த ஒரு விஞ்ஞானியும் மரணம் இல்லாத வாழ்வு பற்றிப் பேசவே இல்லை. ஏனெனில் எந்த ஒரு உயிருக்கும் மரணம் என்றாவது ஒரு நாள் நிச்சயம் வந்தே தீரும். அதனால்தான் 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

### மரணங்களின் வகைகள்

மரணங்கள் எப்படி வரும்? நோயுடனும் வரலாம். நோய்கள் எதுவும் வெளிப்படையாக தெரியாத போதும் வரலாம். நோய் எதுவும் அடியோடு இல்லாதபோதும் வரலாம். நோயுடன் போராடி அது முற்றிய நிலையிலும் வரலாம்.

எவ்வாறாயினும் மரணங்கள் மூன்று வகையில் வரும் என மருத்துவர்கள் கருதுகிறார்கள்.

எதிர்பாராத திடீர் மரணம் (Sudden death) மாரடைப்பு, கடுமையான ஸ்ரோக், விபத்து போன்றவை இதில் அடங்கும். அண்மைக் காலங்களில் ஊடகங்களில் வெளிவரும் விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படும் மரணங்கள் பெரும்பாலும் சடுதியான இருதய நிறுத்தம் (Cardiac arrest) காரணமாகவே நிகழ்கின்றன.

ஏற்றமும் இறக்கமும் கொண்ட படிப்படியான வீழ்ச்சியைத் தொடர்ந்து திடீர் மரணம் ( Slow decline, Periodic Crisis, Sudden death) அல்ஸைமர் நோய், இருதய வழுவல், சிறுநீரக வழுவல், போன்றவை இரண்டாவதில் அடங்கும். நோய் தீவிரமாகி மருத்துமனை செல்வது, சுகமாகி வீடு திரும்புவது. சிறிது காலம் சுகம். மீண்டும் சுற்று வளையும் ஆரம்பிக்கும். திடீரெனத் தீவிரமாகி மரணம் கிட்டும்.

நிதானமான சரிவின் முடிவில் குறுகிய கடும் நிலையுடனான மரணம் (Steady decline, Short terminal phase). மூன்றாவதில் பெரும்பாலான சிகிச்சை பலனளிக்காத புற்று நோய்கள் அடங்கும். படிப்படியாக நோய் அதிகமாகி எதுவித நல்ல திருப்பமும் இன்றி மரணமடைவார்கள்.

இந்த மூன்று வகைகளில் உங்கள் தேர்வு எதுவென யாரைக் கேட்டாலும் நிச்சயமாக சடுதியாக ஏற்படும் மரணம் என்ற விடைதான் வரும்.'தூங்கும் போது மரணம் வர வேண்டும். பேசிக் கொண்டு இருக்கும்போது வர வேண்டும். விளையாடிக் கொண்டிருக்கும போது, படம் பார்க்கும்போது, பாடிக் கொண்டிருக்கும்போது, தொழில் செய்து கொண்டிருக்கும்போது சைக்கிள் ஓடும்போது' என நான் வினவிய ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தமானவற்றைச் சொன்னார்கள்.

ஆனால் அத்தகைய் மரணங்கள் மிகக் குறைவாகவே ஏற்படுகின்றன. நூறு பேரில் பத்துப் பேருக்கு மட்டுமே அவ்வாறு நிகழும் என அறிக்கைகள் சொல்கின்றன. மிகுதி 90 சதவிகிதத்தினருக்கும் அத்தகைய பாக்கியம் கிட்டாது.

### மரணத்துடனான போராட்டம் அதிகரிப்பு



இன்று பெரும்பாலானவர்கள் நீண்ட நாட்களுக்கு மரணத்துடன் போராட வேண்டியுள்ளது. 10 சதவிகிதத்தினர் மட்டும் சடுதியாக இறந்துவிட மீதி 90 சதவிகிதத்தினரும் நோய்களுடன் வாழ்ந்து, வலிகளுடனும் இயலாமை களுடனும் போராடி மற்றவர்கள் உதவிகளில் தங்கியிருந்து படிப்படியாகவே மரணத்தைத் தழுவுகிறார்கள்.

இதற்குக் காரணம் என்ன? எமது சராசரி வாழ்வுக் காலம் அதிகரித்துள்ளது. 1900 களில் பெரும்பாலானவர்கள் 40-50 வயதிற்கு முன்னரே மரணத்தைத் தழுவனார்கள். 1960 களில் இது 55 முதல் 58 வரை இருந்தது. ஆனால் இன்று 75 வரை வாழ முடிகிறது. வயது முதிரும்போது நோய்களின் தாக்கம் அதிகரிப்பதாலேயே மரணம் துன்பமாக மாறுகிறது.

மலேரியா, கொலரா, சயரோகம், வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்கள் காரணமாகவே எமது முன்னோர்கள் பெரும்பாலும் இளவயதிலேயே மரணத்தைத் தழுவினார்கள். பெண்களுக்கு மகப்பேறு மறுபிறப்பாக அச்சம் தந்தது. மாறாக இன்று அதிகரித்த மருத்து வசதிகளும் அன்ரிபயோடிக் பாவனையும் இளவயது மரணங்களைக் குறைத்துவிட்டன.

மரணம் பற்றிய பலரது அச்சத்திற்குக் காரணம் மரணத்தை நோக்கிய நோய்களுடனும் இயலாமைகளுடனுமான துயரமான நீள் பயணம்தான். **உண்மையில் மரணம் துன்பமானது அல்ல. மரணத்தைக் கொண்டு வரும் நோய்களுடன் போராட நேர்வதே துன்பமானது.**

### அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

மரணத்தை நெருங்கும் நோயாளிகள், மற்றும் நடமாட முடியாமல் படுக்கையிலிருக்கும் நோயாளிகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் பல விதமானவை.

உடல் ரீதியான பிரச்சனைகளே பலவாகும். கடுமையான வலி, மூச்சு எடுப்பதில் சிரமம், உணவு விழுங்குவதில் சிரமம், பேச முடியாமை, பசியின்மை, மலச்சிக்கல், சிறுநீர் சிந்தல், சிறுநீர்க் குழாயுடன் துன்பம், சிலரால் நடக்க முடியாமல் போய்விடுவதுண்டு. இதனால் ஆறாத படுக்கைப் புண்கள் ஏற்படுதல் என அவர்களது பிரச்சனைகளைச் சொல்லி அடங்காது.

தொடர்ச்சி 10ம் பக்கம்...


T.T.S.Brothers GmbH&Co.KG
உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846
Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

**அந்திம கால...**

பொருளாதாரப் பிரச்சனை மற்றொரு புறத்தில் தாக்கும். இலங்கையில் மருத்துவம் இலவசமான போதும் பல மருந்துகள் அரச மருத்துவ மனைகளில் கிடைப்பதில்லை. அவற்றை வாங்கப் பணம் வேண்டும். அடிக்கடி மருத்துவ மனை செல்வதற்கான போக்குவரத்து செலவு, விசேட உணவுகளுக்கான பணம், உதவியாளர் தேவை எனில் அதற்கான செலவு. இவற்றால் பொருளாதார பலம் இல்லை எனில் மரணத்தை நோக்கிய வாழ்வு கட்டுபடியாவதில்லை.

இயலாமையில் வாடும்போது தனிமைப்பட்டுப் போதல் மிகவும் துன்பமானது, வெளியார்கள் சந்திப்பது குறைந்துவிடும். வீட்டில் உள்ளவர்களும் அத்தகையவர்களுடன் கதைத்து பொழுது போக்குவது அரிதாகிவிடும். இதனால் தனிமையும் மன உளைச்சலும் வாட்டி வதைக்கும். 'ஒரு சொல் பேசமாட்டார்களா' என உளம் ஏங்கும்.

உணர்வு ரீதியான பாதிப்புகளும் அதிகம் ஏற்படுகின்றன. நோயும், தனிமையும் இயலாமையும் தோழமை கொள்ளும்போது கவலை, ஏக்கம், கோபம், மனப்பதற்றம், மனச்சோர்வு போன்ற உணர்வு வெளிப்பாடுகள் அதிகரிக்கும்.

இறை வணக்கம் செய்ய முடியாமை, மதக் கடமைகளை பூர்த்தி செய்ய முடியாத ஏக்கம், மதத் தலைவரைச் சந்திக்க முடியாமை போன்ற மத ரீதியானதும், ஆன்மீக ரீதியிலான குறைபாடுகளும் இருக்கலாம்.

உடல் ரீதியான பிரச்சனைகளுக்கு மருத்துவர் உதவுவார்கள். ஆனால் தனிப்பட்ட ரீதியானதும் சமூகரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வு அவரது குடும்பத்தவர்களாலும் சுற்றத்தவர்களாலுமே வழங்க முடியும். மருத்துவருடன் மற்ற எல்லோரும் இணைந்த செயற்திட்டமே வேண்டப்படும்.

### உபாதைகளையும் துன்பத்தையும் நீக்குவது

மருத்துவர்கள் நோய்க்கு மருத்துவம் செய்பவர்கள். அவற்றைக் குணமாக்குபவர்கள். ஆனால் எல்லா நோய்களையும் முற்றாகக் குணமாக்க முடியாது. பிரஷர். நீரிழிவு, கொலஸ்டரோல் போன்றவற்றை முழுமையாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் கட்டுப்படுத்தலாம்.

குணமாக்க முடியாதவை பல. சிகிச்சை பயனளிக்காத புற்றுநோய்கள் அவற்றுள் முக்கியமானது. சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை, மூளை போன்றவை இயங்க முடியாமல் போவதும் காரணங்களாகும். சிறுநீரக வழுவல், பக்கவாதத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள், அல்ஸீமர் போன்ற முதுமை நோய்களும் இதில் அடங்கும்.

### நோய் தணிப்பு பாராமரிப்பு



ஆம் அவர்கள் மரணம் நெருங்கிவரும் நோயாளிகள். அவர்களால் வழமைபோல இயங்க முடியாது. இவை முற்றாகக் குணப்படுத்த முடியாத நோய்களாக இருந்த போதும் 'உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது' என மருத்துவர்கள் கைவிரித்துவிட முடியாது.

'சாகப் போகிறவர்தானே நடப்பது நடக்கட்டும்' என உறவினர்களும் வாழாதிருக்க முடியாது. அது மனிதாபிமானம் அற்றது.

அதனால் அவர்களைப் பராமரிப்பது அவசியம். அவர்களது உடல் உபாதைகளைத் தணித்து, அவர்களது மனக் கவலைகளை அக்கறையோடு அணுகுவதுதான் 'நோய் தணிப்பு பாராமரிப்பு' (Palliative care) என்கிறார்கள்

நோய் தணிப்பு பராமரிப்பு பற்றி உலக சுகாதர ஸ்தாபனம் கூறுவது இது

'உயிராபத்து நிலையில் உள்ளவர்களும் அவர்களது குடும்பத்தினரும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை எதிர்கொண்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். அவர்கள் எதிர்நோக்கும் துன்பங்களை ஆரம்ப நிலையில் கண்டறிந்து அதனை தெளிவாக மதிப்பீடு செய்வதும், அதற்கான உடல் உள ஆன்மீக ரீதியான ஆறுதலைத் தருவதாகும்.'

### செய்ய வேண்டியவை எவை

நோய் தணிப்பு பராமரிப்பின் போது எவற்றை நாம் வழங்க முடியும்?

வலி மற்றும் துன்பம் அளிக்கும் எல்லா அறிகுறிகளுக்கும் நிவாரணம் அளிப்பதே முக்கியமாகும். வாழ்க்கை என்பது நிஜம் என உறுதிப்படுத்தும் அதே நேரம் மரணம் என்பது இயல்பானது தவிர்க்க முடியாதது என்பதை அவருக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் உணர்த்த வேண்டும்.

இந்தப் பராமரிப்பு முறையானது மரணத்தை விரைவுபடுத்துவது அல்லது ஒத்தி வைப்பதற்கானது அல்ல என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

நோயாளிகளின் உளவியல் மற்றும் ஆன்மீக அம்சங்களையும் அக்கறையோடு கவனிக்க வேண்டும்.

நோயாளிகள் இறக்கும் வரை, முடிந்த அளவு அவர் இயங்குவதற்கு ஆதரவும் உதவியும் அளிக்க வேண்டும்.

நோயாளியின் துன்பத்தையும் அதைக் கண்டும் தீர்க்க முடியாத கையறு நிலையில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அதைச் சமாளிப்பதற்கான ஆதரவை அளிப்பதும் அடங்கும்.

இவற்றைச் செய்வதற்கு மருத்துவர், மதகுரு, பிசியோதிரபிஸ்ட், தாதியர், உளவளத் துணையாளர், ஏனைய வழிகளில் உதவக் கூடிய தொண்டர்கள் போன்றவர்கள் இணைந்த குழு அணுகுமுறை உதவும்.

இவற்றைச் செய்வதன் மூலம் நோயாளியின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதுடன், நோயின் தாக்கத்தில் சாதகமான மாற்றத்தையும் ஏற்படுத்தலாம்.

### குடும்பத்தில் சுற்றாடலில் உங்களுக்கும்

இவை யாவும் மரணத்தை எதிர்நோக்கும் மனிதரை மனிதாபத்துடன் அணுகவும் வேதனையின்றி இருக்கும் வகையில் பராமரிக்கவும் அவசியமானவையாகும். இதற்கான தேவை உங்கள் சுற்றாடலில் ஏற்படலாம், அல்லது உங்கள் குடும்பத்திலேயே எழலாம்.

இறுதியில் ஒருநாள் உங்களுக்கும் தேவைப்படலாம் என்பதை மறவாதீர்கள். எனவே மற்றவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட இன்றே ஆரம்பியுங்கள். நன்றி: ஹாய் நலமா


ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
ஆதிவாசி பண்டித் கே.சுவாமி



உறவுச்சிக்கல்கள் -
தவறாகப் புரிந்துகொள்ளல்
- நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள்
- வேலை தேடுதல்
- குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள்
- வாகனப் பொருத்தம்
தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை
பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.
Tel: 015 21 46 02 865 / 0151 63 50 9059
கிழமை 7 நாட்களும் 09.00 முதல்
20.00 மணிவரை வரலாம்.
Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach




26
ஆண்டு விழா!
Orientalische
Textilien & Schmuck
எமது ஸ்தாபனத்தின் 26 வது
ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தேர்வில்
தங்க நகைகளும்
பட்டுச்சேலைகளும்
Tel: 0231 16 23 77
உரிமையாளர் எஸ்.ஜெகதீஸ்
Königswall-16 (Am HBF)
44137 Dortmund





யோகன், யோகி:
02823/6838
Handy:
152 138 22 350
சிவகாமி மணவறைச் சோடினை



# இது தான் நடக்கிறது
# சில இந்திய மருத்து மனையில்!

தனியாக எந்தவொரு முன்னுரையும் ,இல்லாமல் நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன்... ஏனெனில், ,இதற்கு முன்னுரை எழுதும் வகையில், ,இந்த கட்டுரையை படிக்கும் அனைவருக்கும் ஒவ்வொரு தனி அனுபவம் ,இருக்கும்.

ஆம். மருத்துவத் துறையில் நடக்கும் தில்லுமுட்டலுகள் பற்றி அங்கொன்றும், ,இங்கொன்றுமாக விவாதிக்கப்பட்ட விஷயங்கள் ,இப்போது பொதுவெளிக்கு வந்திருக்கிறது. அதுவும் ,இரண்டு மருத்துவர்கள் மூலம். மருத்துவர்கள் அருண் காத்ரே மற்றும் அபய் சுக்லே, "Dissenting Diagonisis" என்ற தலைப்பிட்ட ஒரு புத்தகத்தை எழுதி ,இருக்கிறார்கள். மருத்துவத்துறையின் ,இருட்டுப்பக்கங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.
நோயாளிகளின் நலன் அல்ல, பங்குதாரர்களின் நலனே முக்கியம்: 'மருத்துவச் சுற்றுலாவில், இந்தியா, குறிப்பாக சென்னை கோலாச்சுகிறது' என்று ,இங்குள்ள கார்ப்பரேட் மருத்துவமனைகள் பிதற்றிக் கொள்ளும் ,இந்த தருணத்தில், ,இந்த புத்தகத்தின் உள்ளடக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

,இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்களான மருத்துவர்கள் அருண் காத்ரே மற்றும் அபய் சுக்லே முன் வைக்கும் முக்கிய குற்றச்சாட்டு, "இங்குள்ள பெரிய மருத்துவமனைகள் நோயாளிகளின் நலனுக்காக ,இயங்குவதை விட, அதன் பங்குதாரர்களின் நலனுக்காகதான் ,இயங்குகின்றன" என்பதுதான். ,இவர்கள் எந்தக் குற்றச்சாட்டையும் மேம்போக்காக கூறவில்லை. பாதிக்கப்பட்ட நோயாளிகள், நேர்மையான மருத்துவர்களின் வாக்குமூலங்களைக் கொண்டே பதிவு செய்திருக்கிறார்கள்.

நம் அனைவருக்கும் ஒரு அனுபவம் நிச்சயம் ,இருக்கும். அதாவது தேவையற்ற பரிசோதனைகளை மருத்துவர்கள் எடுக்க சொல்கிறார்கள் என்று. ,இது குறித்து ,இந்த மருத்துவர்கள், "பரிசோதனைகள் பாமரனின் பர்ஸை மட்டும் பதம் பார்க்கவில்லை. பரிசோதனைச் சாலைகள், நோயாளிகளிடமிருந்து சேகரிக்கும் ரத்த மாதிரிகளை உண்மையாக பரிசோதிப்பதே ,இல்லை. மருத்துவர்கள் எது மாதிரியான அறிக்கையை விரும்புகிறார்களோ... அதைதான் ,இவர்கள் தயார் செய்து தருகிறார்கள்" என்கிறார். ,இப்போது உங்கள் சொந்த அனுபவங்களை ,இந்த வாக்கியத்துடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.

பெரும் மருத்துவமனைகள், ,இலாப ,இலக்கு நிர்ணயித்துக் கொண்டு வேலை செய்கின்றன. அவர்களுக்கு எப்போதும் அப்பாவி நோயாளிகளின் நலன் முக்கியமே ,இல்லை... லாபம்.. லாபம்... லாபம்... மேலும் லாபம் மட்டுமே முக்கியமாக ,இருந்து வருகிறது என்கிறார்கள் ,இந்த மருத்துவர்கள். நியாயமான மருத்துவர்களை உதாசீனம் செய்யும் மருத்துவமனைகள்:

ஒரு பிரபலமான மருத்துவமனை, தன் மருத்துவமனையில் வேலை பார்த்த சிறந்த சிறுநீரக சிறப்பு மருத்துவரை பணி நீக்கம் செய்தது. அதற்கான காரணம், ஒரு நோயாளிக்கு அதிகம் லாபம் தரும் ஒரு அறுவை சிகிச்சையை செய்யாமல், சாதாரண சிகிச்சை மூலம் குணப்படுத்தியது. ",இது கார்ப்பரேட் மருத்துமனைகள் எவ்வளவு வக்கிர மனநிலையில் செயல்படுகிறது என்பதற்கான சான்று" என்கிறார்கள் ,இந்த மருத்துவர்கள்.

"லாபத்தை முதன்மையான நோக்கம் கொண்ட மருத்துவமனைகள் அனைத்தும் , இப்படிதான் செயல்படுகின்றன. அவர்களுக்கு நோயாளிகளின் நலன் முக்கியம் அல்ல. லாபத்திற்காக தேவையற்ற அறுவை சிகிச்சைகள் மற்றும் மருந்துகளை தன்னை நம்பி வரும் நோயளிக்கு அளிக்கின்றன" என்று வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.

சுக்லே, "எனக்கு தெரிந்த ஒருவர், தனக்கு சொந்தமான வீட்டை விற்று, தன் மனைவிக்கான மருத்துவ கட்டணமான ரூபாய் 42 லட்சத்தை கட்டினார். ஆனால், உண்மையில் அந்த சிகிச்சைக்கு அவ்வளவு கட்டணமெட்டலாம் ,இல்லை..." என்கிறார்.
,இதைதாண்டி ,இவர்கள் வைக்கும் ,இன்னொரு குற்றச்சாட்டு பகீரென்று ,இருக்கிறது. சில மருத்துவமனைகள் உண்மையில் அறுவை சிகிச்சையே செய்யாமல், வெறும் மயக்க மருந்தை மட்டும் கொடுத்துவிட்டு, அறுவை சிகிச்சை செய்துவிட்டோமென்று பணம் பறிக்கிறார்கள்.

கொல்கத்தாவை சேர்ந்த புண்யபிரதா கூன் என்னும் மருத்துவர், "எங்கள் பகுதியில் மருத்துவர்களுக்கு நியாயமாக மருத்துவம் பார்த்தும் ஈட்டும் தொகையை விட, ஆய்வு மையங்கள் அளிக்கும் பங்கு தொகை அதிகம். x-ray எடுக்க பரிந்துரைத்தால் 25 சதவீதமும், MRI, CT ஸ்கேன் எடுக்க பரிந்துரைத்தாட்ட 33 சதவீதமும் கமிஷன் தருகிறார்கள்..." என்று தன் அனுபவத்தை ,இந்த புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார்.



"தன்னிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை, தங்களின் தொடர் வாடிக்கையாளர்களாக வைத்துக் கொள்ள தான் பல மருத்துவமனைகள் விரும்புகின்றன.
அதாவது தேவையற்ற அறுவை சிகிச்சைகள், மருந்துகளை பரிந்துரைத்து, நோயாளிகளை மீண்டும் மீண்டும் திரும்ப வரவைக்க வேண்டும். அதை மருத்துவர்கள் செய்ய தவறும்போது, அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள்" என்று, இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளை நாம் சாதாரணமாக கடந்துவிட முடியாது.

,இந்திய மருத்துவ கவுன்சில் என்ன செய்து கொண்டிருக்கிறது...?

,இந்திய மருத்துவ கவுன்சில் என்ன செய்து கொண்டிருக்கிறது...? என்ற நம் கேள்விக்கு ,இந்த மருத்துவர்களின் பதில், "பெரும் மருத்துவமனைகள் மருத்துவதுறையை திட்டமிட்டு கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், ,இதை மௌனமாக ,இந்திய மருத்துவக் கவுன்சிட்ட வேடிக்கை பார்த்து கொண்டிருக்கிறது. உடனடியாக மருத்துவக் கவுன்சில் தன்னை புதுப்பித்துக் கொண்டு, இந்த அநியாயங்களை தடுத்து நிறுத்த வேண்டும்" என்று வலியுறுத்துகிறார்கள் ,இந்த இரு மருத்துவர்களும்.

(நன்றி: ஆனந்தவிகடன்)



# நீங்களும் ஒரு வாகனத்தை இலங்கையில் வாங்கி நிறுத்துங்களேன்!

**விலை: 2000 யூரோ மட்டுமா?**



**5 பேர் பயணிக்க கூடியது**



இலங்கையில் முச்சக்கர வண்டி பாவனைக்கு வந்த பின் தெருவில் மூச்சைப்பிடித்துக் கொண்டுதான் நடக்கவேண்டும் அவ்வளவு புகைச்சலும் அதன் சத்தத்தினால் ஏற்படும் எரிச்சலும்.தாங்க முடியாதவை.
வாகனங்களுக்கு இடை இடையே புகுந்து பாம்பும் ஏணியும் விளைாட்டுக்காட்டும் சாரதிகள். அப்பப்பா. நன்மையும உண்டு தீமை அதனைவிட அதிகமாகவே உண்டு.

வெளிநாடுகளில் இருந்து செல்பவர்களை கதைகளிலேயே மோப்பம் பிடித்துவிடுவார்கள். அவர்கள் தான் அப்படி என்று பார்த்தால் நம்மவர்கள் ரிப்ஸ் கொடுத்தே கெடுத்து விடுவார்கள். பாவம் அங்கு வாழும் மக்கள்.

சரி முச்சக்கர வண்டிக்கு ஈடாக ஒரு கார் அதுவும் குறைந்த விலையில் வர உள்ளதாம். அதாவது முச்சக்கர வண்டிக்கு பதிலாக சிறிய ரக வாகனத்தை இணக்கப்பாட்டு விலையில் அறிமுகப்படுத்தவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

தற்போது அந்த புதிய கார் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதுடன் இதன் மதிப்பு அமெரிக்க டொலர் 2000 ( இலங்கை ரூபா 3 இலட்சம் ) என தகவல் வெளியாகியுள்ளது.
எனினும் குறித்த காரின் விலையினை இன்னும் இலங்கை அரசாங்கம் தீர்மானிக்கவில்லை.
குறித்த காரில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்க முடிவதுடன் இதில் 5 பேர் பயணிக்க கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும். மேலும் 1 லீட்டர் பெற்றோலில் 36 கிலோ மீற்றர் பயணிக்க முடியும்.
சரி நீங்களும் ஒரு காரை வாங்கி இலங்கையில் நிறுத்தி வையுங்களேன்! வருடத்தில் ஒரு முறை பாவிக்கலாம். நம்ம ஊர் முற்றமும் வருடம் ஒரு முறைதானே!


A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20
45144 Essen

e.mail:atuzuebersetzung@hotmail.com




# தேர்கள்

## நமது பண்பாட்டுப் பெருமிதத்தின் சின்னங்கள்

– நீர்வை.
தி.மயூரகிரி சர்மா





தேர் அறிமுகம்

ளைபெயஅிரயெசை-வாநசவடமொழியில் இரதம் என்று சொல்லப்படுவதே தமிழில் தேர் என்று வழங்குகிறது. இது சிறப்பாக அரசர்களின் ஊர்தியைக் குறித்து நிற்கிறது. ஆனால் தமிழ் இலக்கிய வழக்கில் கானல் நீரை, 'பேய்த்தேர்' என்றும் ரோகிணி நட்சத்திரத்தை சூடாமணி நிகண்டு 'தேர்' என்ற வினைச் சொல்லாலும் குறிப்பிடக் காணலாம்.

தேர் பற்றி திருக்குறளிலும் பல்வேறு செய்திகள் உண்டு. உதாரணமாக "உருள்பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார்" (குறள் 667) என்று வள்ளுவர் உவமை கூறக்காணலாம்.

எனினும் இரதம் என்ற சொல்லாட்சி பொலிவும் விரைந்த செயலும் உள்ள அனைத்தையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. வானில் பறக்கும் விமானங்களை ஆகாசரதம் என்றும் மனவியல் கற்பனைத்திறனை மனோரதம் என்றும் அறிவாற்றலை ஞானரதம் என்றும் சிறந்த தர்க்கத்தை வாதரதம் என்றும் கூறுவர். எருதுகளால் இழுக்கப்படுவதை 'கோரதம்' என்றும் குறிப்பிடுவர். இதனை கொல்லா வண்டி என்றும் கூறுவர். ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளும் கருடத்தாழ்வாரை 'விஷ்ணுரதம்' என்றும் முருகனின் மயிலை 'ஸ்கந்தரதம்' என்றும் அழைக்கும் வழக்கமும் உண்டு. மஹாதிரிபுர சுந்தரியாகிய அம்பாள் எழுந்தருள்வது 'ஸ்ரீ சக்ரரதம்' என்பர். தமிழிலுள்ள ஆண்பாற் பிள்ளைத்தமிழில் 'சிறுதேர் உருட்டல்' என்று ஒரு பருவம் இருப்பதும் சித்திரக்கவி மரபில் 'இரதபந்தம்' என்ற ஒரு வகை இலக்கியம் இருப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

**இலக்கியங்களில் தேர்**

கடோபநிஷதத்தில் மனிதனின் உடலைத் தேராகவும் உயிரைத் தேர்த்தலைவனாகவும் புலன்களைக் குதிரைகளாகவும் புத்தியைத் தேர்ப்பாகனாகவும் புலன் சார் விடயங்களைத் தேரோடும் வீதியாகும் உவமித்திருக்கும் முற்றுருவகம் ஒன்றைக் காணலாம். இது போலவே கிரேக்க உரோம நாகரிகங்களிலும் தேர் சிறப்பிடம் பெறுவதை அவர்களின் இலக்கியங்களினூடே அவதானிக்க முடிகின்றது.
ஸ்ரீருத்திர பூர்வ பாகமாகிய நமகத்தில்

ரதிப்யோ ரதேப்யச்ச வோநமோ நமோ ரதேப்ய:
ரதபதிப்யச்ச வோநமோ நமோ
என்று வருவதும் குறிக்கத்தக்கது.
அதாவது, "தேர்களாகவும் (ரதேப்ய:) தேர்வலவர்களாகவும் (ரதபதிப்யச்ச) உள்ள ஸ்ரீ பரமேஸ்வரனாகிய பகவானுக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம்," என்கிறது. சங்ககாலத்தில் மன்னர்கள் புலவர்களுக்கு தேர்களைப் பரிசாக வழங்கியதாகச் செய்திகள் உண்டு. இத்தகு செயல்கள் தேர்வண்மை எனப்படும்.

கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
புரந்தோங்கு சிறப்பிற் பாரி (புறம் 200)

"பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி" (புறம் 4)

என்பன இவற்றைக் காட்டும்.

முல்லைக்கு பாரி தேரளித்தமையும் குறிப்பிட வேண்டியது. ஔவையார் தேர் செய்ய வல்லவர்கள் பற்றி தனது ஒரு பாடலில், "... வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலனோனே" என்று பதிவு செய்கிறார்.

இது போலவே சிறுபாணாற்றுப்படையில்,

புருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி ஊர்கொண்டாங்கு
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
ஆரஞ் சூழ்ந்த வயில் வாய் நேமியொடு

என்று தேர் செய்யும் முறையை சங்கப்புலவர்கள் அருமையாகப் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இது போலவே பரிபாடலில் சிவபெருமான் முப்புரம் அழிக்க, பூமியாகிய தேரில் வேதக்குதிரைகள் பூட்டி நான்முகச்சாரதியுடன் மேரு மலையை வில்லாகவும் ஆதிசேஷனை நாணாகவும் கொண்டு சிரிப்பால் எரித்தழித்தமை குறிப்பிடப்படுகின்றமை சங்ககாலத்திலேயே வேத புராண மரபுடன் தமிழிலக்கியம் பின்னிப்பிணைந்திருந்தது என்பதையும் செம்மொழித் திறனையும் அக்காலத்தில் தேர்த்திறன் பற்றியிருந்த எண்ணப்பாங்கையும் வெளிக்காட்டுகிறது.



ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ
வேத மாபூண் வையத் தேரூர்ந்து
நாக நாணும் மலை வில்லாக
மூவகை யாரெயில் ஓரழல் அம்பின் முனிய
மாதிரம் அழலவெய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்
(பரிபாடல்-5-வரி 22-27)
இதைத் திருமூலர் தனது திருமந்திரத்தில்

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலக் காரியம்
அப்புரம் எய்தமை ஆரறிவாரே

என்கிறார். இது தொடர்பில் இலங்கையில் அழித்தல் தொழிலை வெளிப்படுத்தும் தேர்த்திருவிழாவில் புதுமணத்தம்பதியர் கலந்து கொள்ளக் கூடாது என்றோர் மூடநம்பிக்கை சாதாரண மக்களிடம் புரையோடிப் போயிருக்கவும் காணலாம். ஆனால் அழித்தல் என்பது மும்மலங்களாகிய எம்மிடமுள்ள கெட்ட ஆணவாதி மலங்களையே என்பது நினைவில் கொள்ள வேண்டியது.

மஹாபாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனின் ரதசாரதியாக இருந்து உபதேசித்த பகவத்கீதை பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றாகும் பெருமை பெற்றுள்ளது. காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்தபுராணத்தில் தேர் பற்றிய பலஅபூர்வ செய்திகள் உண்டு. சூரபத்மனுக்கு அவனது தவத்தின் பொருட்டு சிவபெருமான் வழங்கிய தேரின் பெயர் 'இந்திரஞாலம்'. இது "உண்ணிலா மாயை வல்ல ஒரு தனித்தேர்" என்று சிவாச்சாரியார் குறிப்பிடுவார். அதாவது தானியங்கி நிலையில் மிகுந்த சாமர்த்தியமுடையது இப்பெரும் தேர் என்று குறிக்கப்படுகிறது. பாரத்வாஜர் எழுதிய 'யந்திர சர்வாஸ்தா' என்ற இந்து சிற்ப இயந்திர சாஸ்திரம் இருப்பதாகக் கூறுப்படுவதும் சிந்திக்கத் தூண்டுகிறது.

தொடர்ச்சி 14 ம் பக்கம்



## தேர்கள்: நமது பண்பாட்டுப் பெருமிதத்தின் சின்னங்கள்

13ம் பக்க தொடர்ச்சி....



மஹாபாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜ்யுனனின் ரதசாரதியாக

### சிறப்பு மிக்க தேர்கள்

திருவாரூர் தேர் முதன்மை பெற்றுத் திகழ்கிறது. 300 டன் எடையுள்ள தமிழகத்தின் எடை அதிகமுள்ள தேர் என்பதால் 'ஆழித்தேர்' என்றும் அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் வில்லிபுத்தூர், திருச்செந்தூர், மதுரை, திருவிடைமருதூர், ஸ்ரீரங்கம் திருத்தேர்கள் சிறப்புற்றுத் திகழ்வதும் இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது.

ஸ்ரீரங்கம் பங்குனி உத்திர கோரதம் நம்மாழ்வாரால் அரங்கருக்கு பரிசாக வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கடந்த காலப் போரினால் பழுதுபட்டுள்ள யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம் ஸ்கந்தஸ்வாமி ஆலயத் திருத்தேர் 'மஹோத்திர மஹாரதம்' என்ற பெயரால் அழைக்கப்படுவதும் இங்கு குறிப்பிட வேண்டியது. பூரி ஜகன்நாதர் ஆலயத் தேரும் மிகப் பிரசித்தமானது. வருடா வருடம் புதிதாகச் செய்யப்படுவது.
இரதம் செலுத்துவதில் சிறந்தோரை 'அதிரதன்' என்றும் 'மஹாரதன்' என்றும் இதிஹாசங்கள் சிறப்பிக்கும். ஸ்ரீராமபிரானின் தந்தை 'தசரதன்' என்ற பெயர்பெற்றதும் இக்காரணம் பற்றியே ஆகும்.
கஜ ரத துரக பதாதி என்ற சதுரங்கச்சேனைகளில் ரதம் என்ற தேரும் இடம்பெறுகிறது.

சிந்துவெளிக் காலத்திலே தேரும் மக்கட் குழுமம் ஒன்று இருந்ததாக மேலைத்தேய அறிஞர்களான ஏ.எல்.பசாம் போன்றோர் கூறியுள்ளனர்.
வேதகாலத்தில் பூஷனால் செலுத்தப் பெறும் சூரிய பகவானுடைய தேர் மற்றும் அஸ்வினி தேவர்களுடைய தேர்கள் பற்றிய செய்திகளைக் காணமுடியும். தைத்திரிய சம்ஹிதை யாகமண்டபங்கள் இரதஸ் வருபமாக அமைக்கப்பட்டதாகக் கூறுகிறது. கடலில் செல்லும் நீராவிப் படகுகள் 'அக்னிரதம்' என்று அழைக்கப்பட்டன என்ற கருத்தும் உண்டு.
பிரம்மாவின் தேரை 'வைராஜம்' என்றும் வருணனின் தேரை 'மானிகம்' என்றும் இந்திரனின் தேரை 'திரிவிஷ்டபம்' என்றும் வழங்குவதாகக் குறிப்பிடப்படுகின்றது.
புராணமரபில் சிவபெருமான் திரிபுரங்களை எரிக்க எழுந்தருளிய தேருக்கும் இராவணன் மற்றும் குபேரனுடைய புஷ்பகவிமானம் என்ற ஆகாசரதத்திற்கும் அதிக முதன்மை உண்டு.

திருநாவுக்கரசர் பெருமான் தமது தேவாரத்தில்
பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினொட்டெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே

என்று குறிப்பிடும் போது கூறும் 'கரக்கோயில்' என்பது தேர்வடிவில் செய்யப்பெறும் கோயிலாகும் என்பது இராமநாதபுரம் கலாகேசரி ஆ.தம்பித்துரை ஸ்தபதியின் கருத்தாகும்.



திருவாரூர் தேர் அழகு

இந்த வகையில் கும்பகோணம் ஆராவமுதப்பெருமாள் கோயிலிலும் திருக்கடம்பூர் மற்றும் திருவதிகை ஆகிய கோயில்களிலும் மூலாலயம் தேர்வடிவில் அமைக்கப்பெற்றிருப்பதையும் காணலாம். மாமல்லபுரம் 'பஞ்சபாண்டவர் ரதங்கள்' என்பனவும் இவ்வகையில் நோக்கத்தக்கன.



மாமல்லபுரம் “பஞ்சபாண்டவர் ரதங்கள்“



தற்போது தங்க வெள்ளி ரதங்களும் பல ஆலயங்களில் உள்ளன. ஆயினும் ரதோற்ஸவத்திற்கு மரத்தாலான சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய மஹாரதமே பயன்படுத்தப்படுகின்றது. காரணம் காமிகம் முதலிய ஆகமங்களிலும் வைஷ்ணவாகமங்களிலும் குமாரதந்திரத்திலும் தேர்கள் பற்றிய பல்வேறு செய்திகளை அவதானிக்கமுடியும். ரதப்பரீட்சை என்பது அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகக் கூறப்படுவதும் கவனிக்கத்தக்கது.

தொடரும்......









# யேர்மனியில் தேர்க்காலம்
## ஆலய உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| **கம் காமாட்சிஅம்பாள் கோவில்** Siegenbeck Str-4-5 59071 Hamm-Uentrop | கொடியேற்றம் / தேர் | 20.06.2016 / 03.07.2016 |
| **எசன் கதிர்வேலாயுதசுவாமி கோவில்** Kloster Str.49 a 45139 Essen (für Navigation: gegenüber von Goldschmidtstr.27) | கொடியேற்றம் / தேர் | 02.07.2016 / 10.07.2016 |
| **டோட்முண்ட் சிவன் கோவில்** Kiefer Str.24 44225 Dortmund | கொடியேற்றம் / தேர் | 09:07:2016 / 17.07.2016 |
| **கம் முருகன் கோவில்** Roon Str.2a 59065 Hamm | கொடியேற்றம் / தேர் | 16.07.2016 / 24.07.2016 |
| **கோமஸ்பாக் முருகன் கோவில்** Industrie Str.7 51643 Gummersbach | கொடியேற்றம் / தேர் | 16.07.2016 / 24.07.2016 |
| **சுவெற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் கோவில்** Robert koch Str.5a 58239 Schwerte | கொடியேற்றம் / தேர் | 23.07.2016 / 31.07.2016 |
| **கம் பிள்ளையர் கோவில்** Ferdinand poggel Str.25 59065 Hamm | கொடியேற்றம் / தேர் | 30.07.2016 / 07.08.2016 |

தொகுப்பு: ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்


**மங்கல இசைக் குழு**

நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
**N.K.Raguraman**

Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236



Mob: 0049 157 89 15 95 71


# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நிறுவனர் ஆவணஞானி இரா.கனகரத்தினம் அவர்கட்டு வெற்றிமணியின் அஞ்சலி!



தோற்றம்:01.08.1934-மறைவு:22.06.2016

குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் (அமரத்துவம்: 22.06.2016) என அழைக்கப்படும் இராமசாமி கனகரத் தினம் உலகத் தமிழர்களின் கலைகள், பண்பாடுகள், சுவடிகளை அறிமுகம் செய்யும் அறிஞர், எழுத்தாளர். உலகத் தமிழர் ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவி, தமிழர் தொடர்பான பல ஆவணங்களை சேகரித்து வைத்துள்ளார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நிறுவனர். உலகத் தமிழர் குரல் என்ற மாத இதழை வெளியிட்டார்.

இரா. கனகரத்தினம் 1956 ஆம் ஆண்டு முதல் ஈழத்தமிழர் தொடர்பான ஆவணங்களை சேகரிப்பதில் ஈடுபட்டு வந்தார். இவர் ஆவணங்களை ஈழத்தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தி, உலகத் தமிழ் ஆவணக் காப்பகம் என்ற அமைப்பை கண்டியில் நிறுவி அவற்றைப் பாதுகாத்து வந்தார். இவரால் ஆவணப் படுத்தப்பட்ட ஒரு வரலாற்றுத் தொகுதி யுனெஸ்கோவின் ஆதரவில் சுவிட்சர்லாந்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. உலகின் பழமை வாய்ந்த பத்திரிகைகள், இதழ்களிலிருந்து உலகத் தமிழர்களின் செய்திகளைத் தரம் பிரித்து சேகரித்து வைத்துள்ளார்.

இந்த ஆவணங்களை நோர்வே அரசின் உதவியுடன் 200 இற்கும் அதிகமான நுண்ணிழைப்படங்களில் பதிவு செய்து வைத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 1974 உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவரின் ஆவணங்கள் அடங்கிய கண்காட்சி பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தது. 1994ஆம் ஆண்டில் கனடா, நோர்வே ஆகிய நாடுகளில் கண்காட்சிகளை நடத்தி யுள்ளார். சாலை இளந்திரையன் தலைமையில் இயங்கிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். கனடாத் தமிழர் இவருக்கு ஆவணஞானி என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தனர்.

இரா. கனகரத்தினம் அவர்கள் எழுதியநூல்கள்:

சிறுகதை ("சீசரின் தியாகம் 1952")
அலைகடலுக்கு அப்பால் தமிழர் (1973),
உலகத்தமிழர் ஐக்கியத்தை நோக்கி (1974)
இறி யூனியன் தீவில் எங்கள் தமிழர் (1979)
மொறிசியஸ் தீவில் எங்கள் தமிழர் (1980)
உலகத்தமிழர் ஆவணக்காப்பகம் ஓர் அறிமுகம்
உலகத் தமிழர் ஒருமைப்பாடு - சில நற்கூறுகளும்
ஒரு நூற்றாண்டு இலங்கைத்தமிழர் வரலாறு
ஒரு குடையின்கீழ் உலகத்தமிழினம்





Steeler str 150 (hintereingang) 45139 Essen

எசன் மாநகரில்
**ARASO PALACE**
Orig.Srilankische & Indisch Küche

இலங்கை இந்திய உணவுகள்
சுடச்சுட மணம் குணம் குன்றாது
வழங்குகின்றோம்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் ஊர்வாசத்தோடு கூழ்




Ecke Turm Str.10 45127 Essen Tel: 0201 227334




தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.



06

சேவியர்

“ஒரு கதவு அடைத்தால் ஒன்பது கதவு திறக்கும்” என்பார்கள். ஒரு கதவை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கும் போது அங்கே வேறு ஒன்பது கதவுகள் இருப்பதே கூட நமக்குத் தெரிவதில்லை. வாழ்க்கையின் பெரும்பாலான விஷயங்களில் இது நடந்து விடுகிறது. எந்த ஒரு பிரச்சினைக்கும் விடையாக நமக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு தீர்வையே தேர்ந்தெடுக்கிறோம். ஒரு கட்டத்தில் அதுவே பழகிப் போக, “இந்தப் பிரச்சினைக்கு இது மட்டும் தான் தீர்வு” என முடிவு கட்டி விடுகிறோம்.

துப்பறியும் நாவல்களைப் படிக்கும்போது நமக்கு ஆங்காங்கே மெல்லிய ஆச்சரியம் எழுவதற்கான காரணமும் அது தான். “அடடா… இது நமக்கு தோணாம போச்சே !” என்று கதாநாயகர்களைப் பாராட்டுகிறோம். தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகளானாலும் சரி, அலுவலகப் பிரச்சினைகளானாலும் சரி, வித்தியாசமாய் யோசித்து புதிது புதிதாய்த் தீர்வுகளைக் கண்டுபிடிப்பவர்களை வெற்றி தேடி வந்து அரவணைத்துக் கொள்ளும்.

வித்தியாசமாய் யோசிப்பவர்கள் தனித்துத் தெரிகிறார்கள். சாமந்திப் பூக்களின் தோட்டத்தில் ஒரு பூ மட்டும் நீல நிறமாய்த் தெரிந்தால் சட்டென கண்களை ஈர்த்து விடுவதைப் போல.

விண்வெளியில் காற்று இருக்காது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். விண்வெளி வீரர்கள் சாதாரண பேனா கொண்டு போனால் பயன் இருக்காதாம். எனவே வெற்றிடத்தில் எழுதுவதற்குரிய ஸ்பெஷல் பேனாவைக் கண்டு பிடிக்க அமெரிக்கர்கள் பிரம்மப் பிரயர்த்தனம் செய்தார்கள். கடைசியில் பல கோடி ரூபாய்கள் செலவு செய்து வெற்றிகரமாக ஒரு பேனாவைக் கண்டு பிடித்தார்கள். ரஷ்யர்களுக்கும் இதே சிக்கல் வந்ததாம். அப்போது ரஷ்ய விண்வெளி ஊழியர் ஒருவர் சொன்னார்,”எதுக்குப் பேனா ? ஒரு பென்சில் கொண்டு போய் எழுதுவோமே” ! அவர்களுக்கு இரண்டு ரூபாயில் பிரச்சினை தீர்ந்தது !

“விண்வெளியில் வைத்து எழுதவேண்டும்” என்பது தான் கொடுக்கப்படும் பிரச்சினை. அதற்குத் தீர்வு பல மில்லியன் டாலர் பேனாவாகவோ, இரண்டு ரூபாய் பென்சில் ஆகவோ இருக்கலாம். ஆனால் எது லாபகரமானது ? எந்தச் சிந்தனை வலுவானது ? எந்தச் சிந்தனை எளிதானது ? எது வழக்கத்துக்கு மாறாகச் சிந்திக்கிறது ? இவை தான் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள்.

ஒரு பெரிய சோப் தயாரிக்கும் நிறுவனத்துக்கு ஒரு புகார் வந்தது. ஒருவர் வாங்கிய சோப்களில் ஒரு கவருக்குள் சோப் இல்லை. வெறும் கவர் மட்டுமே இருந்தது ! நிறுவனத்துக்கு இதே போல அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் புகார்கள் எழ, நிர்வாகம் இதற்கு ஒரு பரிகாரம் கண்டுப் பிடிக்க முயன்றது.

கம்பெனியிலுள்ள பெரிய வல்லுனர்கள் எல்லாம் ஒரு அறையில் கூடி விவாதித்தார்கள். ஏகப்பட்ட ஐடியாக்கள் வந்தன.

சோப்கள் வரிசை வரிசையாக ஒரு பெல்ட் வழியாக ஊர்ந்து போய்க் கடைசியில் ஒரு இடத்தில் வந்து சேரும். அந்த இடத்துக்கு வந்து சேருவதற்கு முன் அந்தக் கவர்களிலெல்லாம் சோப் இருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். சோப் இல்லையேல் அதை எடுத்துத் தனியே வைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

சரி. கவருக்குள் சோப் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது ? ஆளாளுக்கு ஒரு ஐடியா சொன்னார்கள். ஒருவர் சொன்னார். “ஒரு எக்ஸ்ரேக் கருவியைப் பொருத்தலாம். அந்தக் கருவி ஒவ்வொரு சோப்பாக ஸ்கேன் செய்து உள்ளே சோப் இருக்கிறதா இல்லையா என்பதைக் காட்டி விடும். அப்புறம் ஒரு ரோபோ கையை வைத்து அந்த டப்பாவை எடுத்துத் தனியே வைக்கலாம் !

இன்னொருவர் சொன்னார். சோப் ஊர்ந்து போகும் இடத்தில் ஒரு சின்ன எடை மிஷின் ஒன்றை வைக்க வேண்டும். சோப் இல்லையென்றால் எடை குறைவாய் இருக்கும். அதை அப்புறப்படுத்தி விடலாம்

இப்படி ஆளாளுக்கு ஒரு யோசனை சொன்னார்கள். நீங்களாய் இருந்தால் இந்தச் சூழலில் என்ன பதில் சொல்வீர்கள் ? இதில் எது சிறந்த வழி ? அல்லது இதை விடச் சிறந்த எளிய வழி உண்டா ? இவை தான் இங்கே கேள்விகள்.



கூட்டத்திலிருந்த ஒருவர் ஒரு அட்டகாசமான ஐடியா சொன்னார். “சோப்கள் ஊர்ந்து வரும் இடத்தில் ஒரு பெரிய ஃபேனை வேகமாகச் சுழல விடுங்கள். சோப் இல்லாத கவர்களெல்லாம் தானே பறந்து போய்விடும். பறக்காத கவர்களிலெல்லாம் சோப் இருக்கிறது என்று அர்த்தம் ! ” இது தான் அவருடைய ஐடியா ! மிக எளிமையான, செலவில்லாத இந்த ஐடியா கரகோஷத்துடன் அங்கீகரிக்கப் பட்டது.

இதை ஆங்கிலத்தில் “அவுட் ஆஃப் பாக்ஸ் திங்கிங்” என்பார்கள். அதாவது வழக்கமாக மக்கள் யோசிப்பது போல யோசிக்காமல் கொஞ்சம் வித்தியாசமாய் யோசிப்பது. லேட்டரல் திங்கிங் என்றொரு சமாச்சாரமும் உண்டு. அதுவும் ஏறக்குறைய இதே அடிப்படையிலானது தான். ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக வழக்கமாக உள்ள வழிகளையோ, சட்டெனப் புலப்படும் வழிகளையோ விட்டு விட்டு வேறு புதுமையான வழிகளை யோசிப்பது தான் இரண்டுக்குமான அடிப்படை. ஒரு சின்ன வித்தியாசமான ஐடியா போதும் ஒரு நிறுவனம் உச்சிக்குப் போக ! ஐபேட், ஐபோன் போன்றவற்றின் வருகைக்குப் பின் ஆப்பிள் நிறுவனம் அடைந்திருக்கும் பிரமிப்பூட்டும் வளர்ச்சி நாம் அறிந்ததே.

தொடர்ச்சி 17 ம் பக்கம்




தன்னம்பிக்கைத் தொடர்...





ஐடியாக்களைக் கண்டுபிடிக்க செலவு ஏதும் இல்லை. மூளையைக் கசக்க வேண்டும் அவ்வளவு தான். பெரிய பெரிய கண்டுபிடிப்புகளெல்லாமே சின்னச் சின்ன ஐடியாவின் நீட்சிகள் தான்.

ஒரு காலத்தில் தீக்குச்சியும், அதை உரசி நெருப்பு பற்ற வைக்கும் மருந்தும் தனித்தனியே இருந்தன. பெட்டிக்குள் குச்சியைப் போட்டு, அதன் பக்கவாட்டில் மருந்து தடவி உரச வைக்கலாம் என்பது ஒரு சின்ன ஐடியா தான். ஆனால் எவ்வளவு அட்டகாசமான ஐடியா இல்லையா ?

எட்வர்ட் டி பானோ என்பவர் லேட்டரல் திங்கிங் விஷயத்தில் புலி. இவர் எழுதிய 40 நூல்கள் இருபத்து ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இவருடைய பார்வையில், அறிவும் சிந்தனையும் வேறு வேறு. வித்தியாசமானச் சிந்தனையை யார் வேண்டுமானாலும் பயிற்சியின் மூலமாக உருவாக்கலாம்.

**ஏன் ? எப்படி ? எனும் கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தால் போதுமாம்.**

இன்னொரு விதமாகச் சொன்னால், லேட்டரல் திங்கிங் என்பது ஒரு விஷயத்தை பலருடைய பார்வையில் பல கோணங்களில் யோசிப்பது. உதாரணமாக வீடு கட்டுகிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். படுக்கையறை நல்ல வெளிச்சமாய் இருக்க வேண்டும் என்பது உங்கள் விருப்பம்.

எலக்ட்ரீஷியன் “நிறைய லைட் போடலாம்” என்பார். கார்ப்பெண்டரோ, “ ரூம் சன்னலைப் பெரிசு பெருசாக வைக்கலாம் ?” என்பார். “பளிச் நிறத்தில் பெயிண்ட் அடித்தால் வீடு வெளிச்சமாய்த் தெரியும்.” என்பது பெயிண்டரின் பார்வையாய் இருக்கும். டிசைனரோ “இரவிலும் ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டலாம், நிறைய கண்ணாடி பொருத்தலாம்” என்பார். வாஸ்துக்காரர் ஒருவேளை “பெட்ரூமை கிழக்குப் பக்கம் பார்க்கிறமாதிரி வையுங்க” என்பார். இப்படி எழும் பலருடைய கோணத்தை நீங்கள் ஒருவரே யோசித்துச் சொன்னால் உங்கள் சிந்தனை வளர்ச்சியடைகிறது என்று பொருள்.

வாழ்க்கை எந்த அளவுக்கு போட்டிகளும், சவால்களும் நிறைந்ததோ அந்த அளவுக்கு வாய்ப்புகளும், வரவேற்புகளும் நிரம்பியது. உங்களுடைய சிந்தனை கூர்தீட்டப்பட்டதாக இருந்தால் பாதைகளில் சிவப்புக் கம்பளம் நிச்சயம் உண்டு. வந்தோமா, போனோமா என்றிருக்காமல் தினசரி செய்யும் வேலைகளில் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம் ? என்ன புதுமைகள் புகுத்தலாம் என யோசித்துக் கொண்டே இருங்கள். ஆச்சரியமூட்டும் உயரிய இருக்கைகள் உங்களுக்கு இடமளிக்கும்.

கூரான சிந்தனைகள் கருவாகட்டும்
எதிர்காலம் வளமாக உருவாகட்டும்.






கதை :
ஒரு கோடீஸ்வரர் இருந்தார். அவருக்குப் பயங்கரமான கண் வலி. அவருடைய வலியைப் போக்க வழி தெரியாமல் எல்லா மருத்துவர்களும் கையைப் பிசைந்தார்கள். கடைசியில் ஒரு துறவியைக் கூட்டி வந்தார்கள். அவர் “உங்கக் கண்ணுக்கு நிற அலர்ஜி வந்திருக்கிறது. இன்னும் ஒரு மாசத்துக்குப் பச்சை நிறங்களை மட்டும் பாருங்க. மற்ற நிறங்களைப் பார்க்காதீங்க” என்றார் இவர் கோடீஸ்வரரல்லவா ? வீடு, படுக்கை துணிகள் எல்லாமே பச்சை கலராய் மாற்றப்பட்டன. பச்சை உடை, பச்சை முகமூடி இல்லாமல் யாரும் அவரை நெருங்க முடியவில்லை.





ஒரு மாதம் கழிந்து துறவி வந்தார். அவர் மீதே பச்சை பெயிண்டைக் கொட்டினார்கள். துறவி அதிர்ச்சியடைந்தார். கோடீஸ்வரரோ, “மன்னியுங்கள் உங்க உடை காவி நிறம். அதனால் தான் பச்சை பெயிண்ட் கொட்டச் சொன்னேன்.” என்று சமாதானப்படுத்தினார் . துறவி வாய்விட்டுச் சிரித்தார். “இவ்வளவு களேபரத்துக்குப் பதிலா நீங்க மட்டும் ஒரு பச்சைக் கலர்க் கண்ணாடி வாங்கி கண்ணுல மாட்டியிருந்தா போதுமே ! ” என்றார் !
இது தான் எளிய, அதே நேரம் வலிமையான சிந்தனை. எந்த ஒரு செயலைச் செய்யவும் பல வழிகள் இருக்கும். நமக்கு ரொம்பவேப் பரிச்சயமான வழியில் நடப்பதைத்தான் நாம் விரும்புவோம். ஆனால் அந்த வழியை விட்டு விட்டு இன்னொரு வழியில் நடக்கும் போது தான் புதுமைகளைக் கண்டடைய முடியும்.




Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

**நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!**
மேலதிகவிபரங்களிட்கு **Tel. 05723-914519** or www.rklimmo.de
or www.lankasri.com

கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேர்த் திருவிழாவில் ( 03.07.2016) எமது
5 யூரோ பெறுமதியான Gutschein பெற்று பயனடையுங்கள்



# தேத்தண்ணி

**வெள்ளைக்காரன் சிலோனிற்கு வந்து கண்டெடுத்த கறுப்பு தங்கம்**





**யூட் பிரகாஷ்**
**அவுஸ்திரேலியா**

நாம் வளரும் நம்மோடு காலங்களில் ஒட்டிக்கொள்ளும் சில விஷயங்கள் காலங்கள் கடக்கும் போதும் சலிக்காமல் அலுக்காமல் எம்மோடு பயணிக்கும், தேத்தண்ணியும் அப்படித்தான். இன்னொரு விதமாக சொன்னால், தேத்தண்ணியின் சுவையும் நயன்தாராவின் அழகு மாதிரி..ரசிக்க ருசிக்க, ருசிக்க ரசிக்க மெருகேறிக்கொண்டேயிருக்கும், திகட்டவே திகட்டாது.

வெள்ளைக்காரன் சிலோனிற்கு வந்து கண்டெடுத்த கறுப்பு தங்கம் இந்த தேத்தண்ணி. இறுதி யுத்தம் உச்சக்கட்டத்திலிருக்கும் போது Ceylon Teaயை புறக்கணிப்போம் என்ற கோஷம் எழுந்த போது மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் தவித்த தவிப்பு தமிழ் கூறும் நல்லுலகம் அறியாதது. என்னுடைய அலுவலகத்தில் வேலை செய்யிற சைனாக்காரி எப்ப சீனா போகும் போதும் எனக்கு Premium China black tea பக்கற்றுகள் கொண்டுவருவாள். சும்மா முகஸ்துதிக்கு "it's wonderful" என்று சொல்லுவன், கருமம் அதை மனுசன் குடிப்பானா.

படிக்கிற காலங்களில் அம்மா தேத்தண்ணி போட்டு கட்டிலிற்கு கொண்டுவந்து, ”எழும்பி படிடா, காலம்பற படித்தா தான் மண்டைக்குள்ள நிற்கும்” என்று சுப்ரபாதம் பாடுவா. Laxspray போட்ட பால் தேத்தண்ணியில் இருக்கும் செழுமை Anchor ல் இருக்காது. இது இரண்டும் இலங்கை அரசு விதித்த பொருளாதார தடையால் ஆனையிறவு தாண்டாமல் விட, பசும்பால் தேயிலையுடன் இணைந்து கொண்டது.

ஒபரேஷன் லிபரேஷன், ஒபரேஷன் பவன் காலங்களில் சங்கக் கடை வரிசையில் கால்கடுக்க நின்று சீனி வாங்கி தேத்தண்ணி குடித்த காலமும் இருந்தது. மணித்தியால கணக்காக வரிசையில் நிற்கையில் பழசுகள் தங்களுக்குள் கதைத்த அரசியலிலிருந்து அறிந்தவை ஏராளம். சங்கக் கடை சீனி இல்லாத நாட்களில் சக்கரையும் கருப்பட்டியும் கடித்து கொண்டு வாசல் படியிலிருந்து ப்ளேன் டீ குடித்த பொழுதுகள் இனிமையானவை.

கொழும்பில, அம்மம்மா ஒரு தேத்தண்ணி பிரியை. அவ போடுற தேத்தண்ணியை ரசித்து ருசித்து குடிக்கிற ஒரே ஆள் நான் தான். பாட்டு பாடிக்கொண்டே காஸ் அடுப்பில் தண்ணி கொதிக்க வைத்து தேயிலை வடியில் லாவகமாக வடித்து டம்ளரரில் ஆத்தி சுடச்சுட தேத்தண்ணி படிக்கிற மேசைக்கு வரும். டம்ளரரில் குடித்தால் தான் தேத்தண்ணி சுவை கெடாது என்ற சூட்சுமம் சொல்லித் தந்தது அம்மம்மா. இரவிரவா படித்த காலங்களில் நான் கேட்காமல் தானே எழும்பி ரெண்டு மூன்று தரம் தேத்தண்ணி போட்டு தாறதும் அம்மம்மா. கடையில் தேத்தண்ணி குடிக்க வெளிக்கிட்டது கொழும்பில் தான். வெள்ளவத்தை காந்தி லொட்ஜ் தேத்தண்ணியை யாரும் அடிக்க முடியாது. பசும்பாலில் நுரைதள்ள டம்ளரரில் கீழ ஒரு கிண்ணி வைத்து சூடு பறக்க பரிமாறுவார்கள். கிண்ணியில் இன்னொருக்கா ஆத்தி வாயில் வைக்க, இளையராஜா மெலடி மண்டைக்குள் கேட்கும். மைசூர் கபே தேத்தண்ணியில் டின்பால் கலப்பதால் அளவிற்கதிமான இனிப்பு தேயிலை சாயத்தின் சுவையை கெடுக்கும்.

சிலோன் இன்ஸிற்கு எதிர்புறம் இருக்கும் ஊத்தைகடை ப்ளேன் டீ அருமை. சின்ன கிளாசில் திறமான சாயத்தில் அளவான சீனி போட்டு தருவாங்கள். ஒரு குட்டி ரொட்டியோடு சேர்த்தடிக்க படித்த களைப்பு பறக்கும். அந்த ப்ளேன் டீக்கே பொக்கற்றுக்குள் காசில்லாமால், அன்றைக்கு காசுள்ள நண்பன் வரும்வரை காத்திருந்து ப்ளேன் டீ வாங்கி குடித்த காலமும் எங்கட குறூப்பில் இருந்தது. அந்த நினைவுகளால் எப்ப கொழும்பு போனாலும் காந்தி லொட்ஜில் பொக்கற்றுக்குள் காசோடதேத்தண்ணி குடிக்காமல் வாறதில்லை.

கொழும்பு கம்பஸ் கன்டீனில் குட்டி ப்ளாஸ்டிக் கப்பில் தேத்தண்ணி என்ற பெயரில் களனித்தண்ணி ஊத்துவாங்கள். காதலிக்கும் பருவமாயிருந்ததால் தேத்தண்ணி சுவையை மறந்து காதலியை ரசித்த பொழுதுகள், களனித்தண்ணியையும் ருசித்து குடித்த கணங்கள்.

கலியாண வாழ்க்கையில் மனிசியின் மூட், போட்டு தாற தேத்தண்ணியில் தெரியும். சீனியோடு சேர்த்து ஒரு கரண்டி காதலும் கலந்திருந்தால் தேத்தண்ணி அமிர்தமாகும். அமிர்தமாய் தேத்தண்ணியும் போட்டு ”வாரும் படியிலிருந்து டீ குடிப்பம்” என்று ஆசையாய் கூப்பிட்டால், பாரதிராஜாவின் வெள்ளை சட்டை போட்ட டான்ஸிங் கேர்ள்ஸ் லல் லல் லா பாடிக்கொண்டு என்னை அழைத்து செல்வார்கள். சீனியே போடாமல் தேத்தண்ணி அநாதரவாய் மேசையில் நின்றால், ஆமி கோட்டைக்கால வெளிக்கிடப் போகுது என்று அர்த்தம்.

அப்ப பிள்ளை பிடித்து கொண்டு திரிந்த காலங்களில் நானும் தம்பியும் வீட்டில் அடைபட்டிருந்தோம். பாதுகாப்பு கருதி முன் கேட் ஆமை பூட்டு போட்டு பூட்டப்பட்டிருக்கும். ஒரு நாள் பின்னேரம் தம்பியை தேத்தண்ணி போட்டு தர கேட்டேன். அவன் ”நீ தண்ணி சுட வை, கோப்பை கழுவு, நான் தேத்தண்ணி போடுறன்” என்ற ஒரு நியாயமேயில்லாத நிபந்தனை விதித்தான். எனக்குள் இருந்த தேத்தண்ணி விடாய் போராட்டத்தை தவிர்த்து சரணடைவை நோக்கி தள்ளியது.

அடுப்பில் பத்மவியூகத்தில் விறகடிக்கி, நடுவில் பொச்சு மட்டை செருகி, சூர்யா நெருப்பு பெட்டியில் தீக்குச்சி உராசி அடுப்பு மூட்டி கேத்தில் வைத்து தண்ணி கொதிக்க வைக்க தொடங்கினேன். அடுப்பு ஊதி நெருப்பை கூட்ட குனிய.. பலத்த சத்தத்தோடு கிரனேட் வெடிக்கும் சத்தம் ஒன்றும் பிறகு சரமாரியாக துப்பாக்கி சுடும் சத்தமும் கேட்டது. சடக்கென்டு கீழ விழுந்து படுத்திட்டன். மதிலிற்கு வெளியே சிலர் சப்பாத்து காலோடு ஓடுற சத்தமும் தொடர்ந்து துப்பாக்கிகளின் சூட்டு சத்தமும் ஒலித்து கொண்டிருக்கிறது.

கொஞ்ச நேரத்தில் எங்கட கேட்டை திறக்க யாரோ முயல்வதும் ஹிந்தியில் கத்துவதும் கேட்கிறது. தம்பி அறைக்குள் நான் குசினிக்குள், ரெண்டு பேரும் அசையாமல் இருக்கிறம். பக்கத்து வீட்டு அன்ரியின் குரலும் கேட்குது. கொஞ்ச நேரத்தில் கேட்டுக்கு மேலால சப்பாத்து கால் பாயுற சத்தம் கேட்குது. அடுத்த சில நொடிகளில் குசினி வாசலில் இந்தியன் ஆமிக்காரன் துவக்கை நீட்டி கொண்டு நிற்கிறான்.. ஏதோ சொல்லுறான்.. தேத்தண்ணி விடாயில் கதி கலங்கி நிற்கிற எனக்கு ஒன்றும் விளங்கேல்ல ”சலோ சலோ” மட்டும் விளங்குது.

எழும்பி, வெறுமேலோடு கையை தூக்கி கொண்டு நிற்கிறன். அவன் கிட்ட வந்து என்னை வெளியே போகச்சொல்லி தள்ளுறான். இனியென்ன.. கொண்டுபோய் சந்தியில குந்த வைப்பாங்கள், காட்டி கொடுக்க தலையாட்டி ஈபிகாரன் வருவான். வெறுமேலோடு ரோட்டிற்கு போனா அம்மாட்ட அடிவிழும் என்று மண்டையில் பொறி தட்ட"Sir.. Shirt please" அரை குறையை அரை குறை இங்லீஷில் கெஞ்சினேன்..

”சப்கே குப்கே ஆப்தே சலோ சலோ” என்று சொன்ன மாதிரி கேட்டுது "Sir.. Me Mohinder Amaranath Fan.. Please.. Shirt.. Please" ஹிந்தி கதைக்கிறவன் எல்லாம் டெல்லிகாரனாயிருப்பான் மொஹிந்தர் அமரநாத்தை பிடிக்கும், எனக்கு இரக்கம் காட்டுவான் என்று நம்பி அந்த அஸ்திரத்தை ஏவினேன்.

”ஆப்தே கியா ஹேய்.. சலோ சலோ” இந்த முறை அவன் கடுப்பானது விளங்கிச்சு.

பம்பாய்கார ரவி சாஸ்திரியை பிடிக்குமென்று இனி சொன்னால் என்னுடைய பம்மில இவன் தருவான், வெறுமேலோடு ரோட்டிற்கு போனதுக்கு அம்மா தருவா.. வாங்கிறது தான் வாங்கிறது ஏன் அந்நியனிடம் அடி வாங்குவான் என்று முடிவெடுத்து வெறுமேலோடு கைகள் தலைக்கு மேல் உயர்த்திய படி சந்திக்கு வந்தால், என்னை தவிர பிடிபட்ட என்னுடைய அயலண்டை நண்பர்கள் எல்லோரும் சேர்ட் போட்டிருக்கிறாங்கள். என்னை வெறுமேலோடு கண்டதும் அந்த ரணகளத்திலும் நக்கலாய் சிரிக்கிறாங்கள், அவங்களுக்கும் தெரியும் எனக்கு இன்றைக்கு வீட்ட பூசை இருக்கென்று.

இந்திய இராணுவத்தின் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் சந்தியில் வெறுமேலோடு குந்தியிருந்து யோசிக்கிறன்

”திரும்பி போகேக்க தம்பி தேத்தண்ணி போட்டு வைத்திருப்பானோ ?”

**கம் காமாட்சி அம்மன் தேர்த் திருவிழாவில் (03.07.2016) எமது விஷேட விலைக்கழிவில் பயனடையுங்கள்**





# ஹரம்பி

**4ம் பக்க தொடர்ச்சி....**

ஐந்தறிவுதான் என்றாலும் புத்திசாலிக் ஹரம்பி சிறுவனை அப்படியே தண்ணீரில் மிதக்க விட்டபடி அப்படியே ஒரு பாதுகாப்பான ,இடத்திற்கு ,இழுத்துச் சென்றது. ,இக்கட்டான அந்த சூழ்நிலையில் வேறெதுவும் செய்யக் கூடிய நிலையில் ஹரம்பி ,இருக்கவில்லை. குழந்தையைத் தண்ணீருக்குள்ளால் ,இழுத்துச் சென்று பாதுகாப்பாக மூலையில் உட்கார்ந்து கவனமாகத் தனது காலடியில் இருத்திவைத்திருந்தது.

கும்பலின் குரல் ,இப்போது இன்னும் அதிகரித்திருந்துது. 'சூட் தட் நாஸ்டி அனிமல்' கும்பலில் யாரோ கூக்குரலிட்டார்கள். அடுத்த கணம் அருகே நின்ற சிலரும் சேர்ந்து அவனோடு கோரஸ் பாடினார்கள்.
'சுடுவதா ,ல்லையா?' துப்பாக்கியோடு ஹரம்பியைக் குறிவைத்தபடி நின்ற காவலாளியின் மனம் ஒரு நிலையில்லாமல் தவித்தது.

எந்த ஒரு காரணமும் ,இல்லாமல் அநியாயமாக ஒரு உயிர் பறிக்கப்படப் போகிறதே என்ற கவலைகூட ,இல்லாமல் 'கொன்றுவிடு' என்ற குரல்கள் துப்பாக்கி ஏந்திய காவலாளியில் மனதில் வலுக் கட்டாயமாக மீண்டும் மீண்டும் விதைக்கப்பட்டன.

தற்செயலாகச் சிறுவனுக்கு ஏதாவது நடந்தால் தன் மீது பழியைப் போட்டு விடுவார்கள். அதற்கு முன் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நினைப்போடு அவனது விரல் ட்ரிக்கரில் பதிந்தது.

குரங்கில் ,இருந்து பிறந்தவன்தான் மனிதன் என்பார்கள். தன்னை சுடுவதற்கு ,இந்த ஆறறிவு படைத்தவர்கள் ஏன் குறி வைக்கிறார்கள் என்பது கூட அந்த ஐந்தறிவு படைந்த கொரிலாவிற்குப் புரிந்திருக்கவில்லை.

நெற்றிப் பொட்டில் துப்பாக்கி ரவை துளைத்து ,ரத்தம் பீறிட்ட போதும்கூடச் சிறுவனைத் தாக்க ஹரம்பி முனையவில்லை. உயிர் பிரியும் அந்தக் கடைசி நிமிடத்தில்கூட 'உன்னை வெறிபிடித்த ,இந்த மனிதக் கூட்டத்தில் ,இருந்து பாதுகாக்க என்னால் முடியவில்லையே' என்ற ,யலாமையுடன் கண்களில் நீர்துளிர்க்க மௌனமாக அந்தச் சிறுவனைப் பார்த்தது ஹரம்பி.

அடுத்த விநாடியே விழி மூடக்கூட அவகாசம் ,ல்லாமல் அதன் உயிர்த் துடிப்பு மெல்ல அடங்கிப் போனது. வாய் பேசமுடியாத அந்த ஜீவனின் உயிரைப் பறித்து விட்ட மனநிறைவோடு வெளியே நின்று கத்திக் கூக்குரலிட்டவர்கள் தங்கள் வெறி அடங்கியதும் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினார்கள்.

'கட்டுக்கடங்காமல் போகலாம் என்பதால் ஹரம்பியைச் சுட்டுக் கொன்று விட்டோம்' என்று பொறுப்பானவர்கள் அறிக்கையில் எழுதிவைத்து விட்டுப் போய் விட்டார்கள். 'உங்களைவிட எங்களுக்குத்தான் கவலை அதிகம்' என்று முகநூலில் பதிவு செய்து தங்களுக்குள் வேறு சமாதானம் சொல்லிக் கொண்டார்கள்.
“தன்னைப் பலி கொடுத்ததன் மூலம் காலமெல்லாம் திட்டித் தீர்க்கவிருந்த மனித குலத்திடம் ,இருந்து ஹரம்பி விடுதலை பெற்றுக் கொண்டது. “

அவரவருக்கு அவரவர் வாழ்க்கை முக்கியமானாலும், ஒன்று மட்டும் எனக்குப் புரியவில்லை. ,இவர்களுக்கு எப்படி மனம் வந்தது ஹரம்பியைச் சுட்டுக் கொல்வதற்கு? அனாதையாய் கூண்டுக்கள் அடைந்து கிடந்து ,இத்தனை காலமாய் வந்து போன பார்வையாளர்களை எல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருந்த ஹரம்பியும் ஒரு தாயின் பிள்ளைதானே!



வெற்றிமணி பொக்கிஷம் 01.06.2004

## ஊடகச்செம்மல் திரு.வீ.ஆர். வரதராஜா அவர்களின் மறைவு ஊடகங்களுக்கு பெரும் இழப்பாகும்.

ஏலையா முருகதாசன்

27.06.04 ஞாயிற்றுக்கிழமை சர்வதேசப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் முத்தமிழ்க் கலைமாலை ஜெர்மனி டோட்மூண்ட் நகரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவிற்கு ஏலையா திரு.க.முருகதாசன் அவர்கள் தலைமைதாங்க சிறப்பு விருந்தினர்களாக நூலகவியலாளர் திரு. என் செல்வராஜா அவர்களும் இலக்கியச் செம்மல் இந்துமகேஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். செல்வி. சுஜாதா முருகதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவின் சிறப்பு அம்சமாக ஒன்றியத்தின் உயர் கௌரவவிருது வளங்கப்பட்டது. இவ்விருதுகள் முறையே ஜெர்மனி தமிழ் கல்விக் கழகப் பெறுப்பாளர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களுக்கு கலைவிளக்கு சு. பாக்கியநாதன் அவர்கள் தங்கப் பதக்கம் அணிவித்து தமிழேந்தல் என்ற விருதுப் பட்டயத்தை வழங்கினார். அடுத்து கௌரவ விருது பெற்றவர் மூத்த பத்திரிகையாளர் திரு வீ. ஆர் .வரதராஜா அவர்கள் திரு. சிங்கராஜா அவர்கள் தங்கப்பதக்கத்தை அணிவிக்க திரு. விசுவலிங்கம் அவர்கள் ஊடகச் செம்மல் என்ற விருதுப்பட்டயத்தை அளித்தார்.
நன்றி:வெற்றிமணி (01.06.2004)

”ஊடகச்செம்மல் ”திரு.வீ.ஆர் வரதராஜா அவர்கள் 22.05.16ல் ஜேர்மனி ஓபகவுசன் நகரில் காலமானார்.
வீரகேசரி பத்திரிகையில் செய்தி ஆசிரியராகவும் அரசியல் ஆய்வாளருமாக தனது ஊடகவியலாளர் பயணத்தை ஆரம்பித்த ஊடகவியலாளர் திரு.வீ.ஆர்.வரதராஜா அவர்கள் புலம்பெயர்ந்து ஜேர்மனிக்கு வந்ததன் பின் பாரீஸ் ஈழநாடு, ஈழமுரசு,வெற்றிமணி, மற்றும் புலம்பெயர் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில தாயகச் செய்திகளையும் 25 ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வருவதுடன் அவர் காலமாகும் நாள் வரை வீரகேசரி வாரமலரில் சமகால இலங்கை அரசியல் பற்றிய எழுத்தாளராக தனது ஊடகப் பணியை தொடர்ந்தவர்.
புலம்பெயர் நாடுகளில் இயங்கி வந்த வானொலி தொலைக்காட்சி ஊடகங்களான ரிஆர்ரி வானொலி தொலைக்காட்சியிலும், ஐபிசி வானொலியிலும், ரிரிஎன் தொலைக்காட்சியிலும்,ஜிரிவி தொலைக்காட்சியிலும் ஜேர்மனியின் அரசியல் சமூக நிலவரங்களை தொகுத்து வழங்கிக் கொண்டே இருந்தவர்.ஜேர்மனியில் இயங்கி வருகின்ற தமிழ் கல்விக் கழகத்தின் மாநிலச் செயல்பாட்டளராகவும் சேவை செய்தவர். பத்திரிகைத்துறையில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர்.
பழம்பெரும் ஊடகவியலாளரான இவருக்கு பன்னாட்டு புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியம் 2004ஆம் ஆண்டு ”ஊடகச்செம்மல்” என்ற கௌரவ விருதளித்து கௌரவித்தது.தாயகத்திலும் ஜேர்மனியிலுமாக 40 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகையாளராக ஊடகவியலாளராக பத்திரிகைகளிலும் வானொலி தொலைக்காட்சி ஊடகங்களில் சேவையாற்றிய இவர் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் பொருளாளராக பணியாற்றியதுடன் ஜெனிவாவில் இயங்கும் சர்வதேச பத்திரிகையாளர் சங்கத்தில் 35 வருடகாலமாக அங்கத்தவராக இருந்தவருமாவர். ஊடகத்துறையில் தன்னை ஒரு வரலாறாகவே மெய்பித்து நின்ற ஊடகச்செம்மல் திரு.வீ.ஆர்.வரதராஜா அவர்கள் வாசாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் பேரனாவர். ஊடகச்செம்மல் திரு.வீ.ஆர். வரதராஜா அவர்களின் மறைவு பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களுக்கு பெரும் இழப்பாகும்.






# நாம் ஏன் தமிழைக் கற்கவேண்டும்?




நாம் ஏன் தமிழைக் கற்கவேண்டும்?

## பதில் மூன்று

இக் கேள்வியை நான் தமிழ்மொழியைச் சிறு வயதிலிருந்தே கற்று வரும் ஒரு மாணவன், **செல்வன் சந்தோஷ் சிவகுமாரன்** அவர்களிடம் கேட்டேன். அவர் கற்பதற்குக் காரணம் இதோ:



**செல்வன் சந்தோஷ் சிவகுமாரன்**

தமிழ் எனது தாய்மொழி! ஓர் இனத்தின் அடையாளமே மொழி. எங்களுக்கென்று இருக்கும் ஓர் அடையாளமே எம்மொழியான தமிழ்மொழி தான்.
சொந்த நாடில்லாமல், அடிமைகளாக வாழும் தமிழ் இனத்திற்கு வலிமை கொடுப்பதே தமிழ். அதனால் நான் தமிழ் மொழியினை விருப்புடன் கற்று வருகின்றேன்.

வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தமிழ்மொழியை நாங்கள் கற்க வேண்டும். மொழியைக் கற்பது மட்டுமல்லாமல், கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும்.

பேச மட்டும் கற்றுக்கொள்ளாமல் எழுதவும் தெரிந்துகொண்டால் உறவினர்களோடு உரையாடவும் அஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும் இலகுவாக இருக்கும். தமிழ்ப் பாடல்களின் மற்றும் கவிதைகளின் கருத்துகளை தமிழ் தெரிந்தால் மட்டுமே உள்வாங்க முடியும். இம்மொழி எனக்கு மிருதங்கம், வயலின் பயிலவும் உதவுகின்றது.
வெவ்வேறு மொழிகளைக் கற்கும் போது பல விதமான விடயங்களைத் தெரிந்துகொண்டு அறிவை வளர்த்துக்கொள்ளலாம். தனித்துவமான தமிழைக் கற்பதைப் பெருமையாக நினைக்கின்றேன்.

அடுத்ததாக ஒரு தாயின் கருத்தறிய,
**திருமதி அருள்யோகம் ஜெயக்குமார்** அவர்களிடம்...



புலம்பெயர் நாட்டில் பெற்றோர்களாகிய நாம் எமது பிள்ளைகளுக்குத் தாய்மொழியைக் கற்பிப்பதன் மூலம் மொழி, இனம், நாடு அழிந்துவிடாது பாதுகாப்பது பிள்ளைகளின் கடமை என்பதை நன்கு அறிந்துள்ளோம்.
"ஆல்போல்த்தழைத்தோங்கிய மொழியை அறுகு போல் வேறூன்ற" வைப்பதே நோக்கமாக அமைந்துள்ளது.

"தாயினும் இனிய தமிழ்மொழியை" கற்பிப்பது எமக்கு அவசியமாகின்றது.தாய்மொழியும் தாய்நாடும் தாய்போலாகும். பிள்ளைகள் தாய் மொழியைத் தான் முதலில் பேசத் தொடங்குகின்றார்கள். "அ" என்று தொடங்கி "அம்மா" என்ற சொல்லை அழைத்து, தாயின் பரிணாம சிந்தனையில் வளரத் தொடங்குகின்றார்கள். ஆரம்பப்பள்ளியை இரு மொழிப் பள்ளிகளிலும் கற்கின்றார்கள். இதன் பயனாக இரு நாடும் இரு நண்பர்களும் ஆகின்றனர்.

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதான மொழியை எங்கும் காணோம்" எனப் பாரதியார் கூறியதுபோல் தமிழ்மொழியிலுள்ள 247 எழுத்துகளையும் மொழிவடிவமாகவும், வரிவடிவமாகவும் அழகாவும், சிறப்பாகவும் பேசியும் எழுதியும் கற்கின்றார்கள். இலக்கண இலக்கியங்களை விரிவாக ஆராய்ந்து கற்பதனால் அவர்களுக்கு மொழியின் சிறப்பும் தேசப்பற்றும் மென்மேலும் வளர்கிறது.
வேற்றுமொழிப் பாடசாலைகளில் மிகவும் திறமையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனை ஆய்வு செய்த மேலைநாட்டவர் தாய்மொழியே மூலகாரணம் என்பதை அறிந்து, பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வெளியிட்டிருந்தார்கள். ஆகவே தாய்மொழி அவசியம் என்பது உறுதியாகின்றது.
மொழியைக் கற்பதன் மூலம் கலை, கலாச்சாரம், பண்பாடு நாகரீகம், பழக்கவழக்கங்கள், இறைவழிபாடு நமது பிள்ளைகளிடம் காணப்படுகின்றது. இவற்றை வெளிநாட்டவரும் விரும்பி நண்பர்களாகவும் உறவினர்களாகவும் இருக்கின்றார்கள் என்றால் எமது மொழியே காரணம் என்பது நன்கு புலப்படுகின்றது. விழாக்கள், கொண்டாட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் எமது மொழியில் தானே பேசுகின்றார்கள். இதனால் மொழிப்பற்று, ஒற்றுமை, உணவுப் பழக்கவழக்கங்கள், நாகரீகங்கள் வளர்ச்சியடைகின்றன. மீண்டும் தாய்நாட்டிற்குச் சென்று இனம், மொழி எமது தேசம் என்பவற்றை அழியாது பாதுகாத்து, ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்பதே எங்கள் நோக்கமாக அமைந்துள்ளது. இதுபோல் நமது பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற தேவை அவர்களுக்கு இருக்கவேண்டும் என்பதாகும்.

### ஆசிரியை, திருமதி உதயதேவி யஸ்ரின் அவர்களின் கருத்து:



இராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று. இம்மொழி இன்றும் உலகமொழி ஆராய்ச் சியாளர்களின் ஆய்வுக்குள் இருக்கின்றது. செம்மொழியான எம்மொழி உலகில் எட்டுக்கோடிக்கு மேலான மக்களின் தாய்மொழியாக விளங்குகிறது. இம் மொழிக்குரிய இனத்திற்கென்று ஓர் நாடு இல்லா விட்டாலும் அது வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.
இவ்வாழ்வுக்குக் காரணமான கழகநூல்களே, வள்ளுவனும், ஔவையும், நாயன்மார்களும் அருளிய நூல்களே தமிழரின் அறவாழ்வுக்கு அடித் தளமாக விளங்குகின்றன.

தமிழ்மொழிக்குரிய இனமான தமிழனின் பண்பாடுகளும், அறிவுக்கூர்மையும் கணினி உலகத்திலும் திறமையானவர்களாக விளங்குகின்றார்கள்.


**ஆசிரியை, திருமதி உதயதேவி யஸ்ரின்**

தமிழ்மொழிக்குரிய இனம் பூகோளத்தில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தாய்த்தமிழ்மொழியை மறவாது எங்கள் சந்ததியினருக்கும் கொடுக்க வேண்டும். எனவே இளம் சந்ததியினர் தாய்மொழியை கற்கவேண்டும். தமிழ்மொழியினைக் கற்றால் தான் அவர்களுக்கு மனித அறவாழ்வினை அறிந்து ஒழுக வழிவகுக்கும். இனத்தின் மொழியும், கலைகளும், பழக்கவழக்கங்களும் மற்றைய இனமும் போற்றும் அளவிற்கு உயர்ந்து நிற்கின்றது. தமிழ்மொழியின் இலக்கியச்சுவையை இளம் சந்ததியினர் அறிய மொழியின் ஆழத்தன்மையைத் தெரிந்தாலே அவர்களால் முடியும். ஆகவே எம் தொன்மையான மொழி மறைந்து போகாது காக்கும் தமிழ் அமைப்புக்கள், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள், கலை ஆசிரியர்கள் எல்லோரும் தமிழ்மொழிச் சேவையாளர்களாக மென்மேலும் அடுத்த சந்ததியினருக்குக் கொடுத்து தமிழ் வாழச் செய்யுங்கள்.



# இறந்தகாலத்தின் எதிர்காலம் இன்றைய நிகழ்காலம்.

DJ வினோ



"இறந்தகாலத்தின் எதிர்காலம் இன்றைய நிகழ்காலம்." என்று கேட்கும் போதே சற்று தலையே சுற்றுகின்றது. "இறந்தகாலத்தின் எதிர்காலம் இன்றைய நிகழ்காலம்." என்பதை இருமுறையோ அல்லது பலமுறையோ மீண்டும் மீண்டும் வாசிக்கும் போதே அதன் உண்மையான அர்த்தம் புரிந்து கொள்ள முடிகின்றது. என்னதான் மனிதன் தொழில்நுட்பத்தில் அதீத வளர்ச்சி அடைந்துவிட்டான் என்று கூறினாலும், உண்மை அதுவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். ஒரு சில புத்திசாலிகளின் புத்திசாலித்தனமான கண்டுபிடிப்புக்களால் ஊரில் உள்ள மற்றோரெல்லாம் முட்டாளாகிக் கொண்டிருப்பது தான் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் உண்மையான முகம். அதற்கான காரணம் என்ன என்று கூர்ந்து கவனித்தோம் என்றால், மனிதனின் முதல் அறிவியல் பரிமாண வளர்ச்சி எதுவென்று பார்த்தால் அனைவரும் அறிந்ததே, மனிதன் பேசத் தொடங்கியதுதான் மனிதனின் முதல் அறிவியல் பரிமாண வளர்ச்சியாகும்.

பேசத்தொடங்கிய மனிதன் மொழியை நிறுவி மிருகங்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டான். அவ்வாறு மனிதனின் ஆரம்பக் கட்ட பரிமாண வளர்ச்சிகூட இல்லாத பலர் இன்றைய உலகில் இருந்தால், மனிதன் தொழில்நுட்பத்தில் விருத்தி கண்டுள்ளான் என்பதை எவ்வாறு அங்கீகரிக்க முடியும்? கடல் மீன் குளத்துள் வாழ்வது போன்று, நாடு விட்டு நாடு இடம் பெயர்ந்து கலாச்சாரம் கலந்து வாழ்வதாலும், பல மொழிகளின் கலப்பாலும் தன் தாய்மொழியில் உள்ள வார்த்தைப் பிரயோகத்திற்கே அர்த்தம் புரியாது, வேகமான உலகில் புரியாவிடினும் தலையை ஆட்டிக் கொண்டு ஓடிக் கொண்டுள்ளனர் இன்றைய சமுதாயத்தினர். அவ்வாறுள்ள அனைவருக்கும் ஒரு அற்புதமான விடயம் ஒன்றை அம்பலப் படுத்தவுள்ளேன்.

இன்றைய நவீன உலகில் அனைத்து கண்டு பிடிப்பிக்களும், தொழில்நுட்பங்களும் புதிதானவை, பிரமாண்டமானவை என்று கூறினாலும், அவற்றில் ஒரு பலவீனம் உள்ளது. அதி நவீன தொழில்நுட்பமாகினும் அந்தவொரு பலவீனத்தால் அது தடுமாறுகின்றது. அந்த பலவீனம் வேறொன்றுமில்லை, மின்சாரம் என்ற கருப்பொருளாகும். அப்படிப்பட்ட ஆடம்பர வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மின்சாரத்தை உருவாக்கும் அத்தனை முயற்சியும் சூழலை மாசுபடுத்தக் கூடியதாக அமைந்திருப்பது தான் ஒரு பெரிய தலைவலியாக உள்ளது. அணுவை பிளந்து அதீத இயக்கு சக்தியை பெற்று அதை மின்சக்தியாச் சேமிக்கும் வரை இயற்கையின் ஐம்பூதங்களும் மாசடைகின்றது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற ஐந்தையும் பூதங்கள் என்று கூறக் காரணம் இப்போது புரிகின்றதா? பூதம் என்ன செய்யும்? சோர்ந்து அமைதியாக படுத்திருப்பது போன்று இருக்கும். பசி வரும் போதோ அல்லது எவரும் தொந்தரவு கொடுக்கும் போதோ அதன் முழு ஆக்ரோசத்தையும் காட்டும் என்று கதைகள் மூலம் படித்துள்ளோம். பூதங்களின் தலைவர் ஆகிய கணபதியை, அனைத்துக் காரியங்கள் ஆரம்பிக்கும் முன்பும் வழிபட்டு தொடங்கக் காரணம் எதுவெனில், ஐம் பூதங்கள் மூலம் நான் செய்யும் காரியங்களில் எந்த களங்கமும் வராது காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையே ஆகும். இன்றைய கால அதி நவீன கண்டு பிடிப்புக்கள் என்றால் எவை? அதி வேகமாகச் செல்லும் விமானகள். மகாபாரதம் இராமாயணம் என்ற இரு இதிகாசங்களிலும் கூறப்பட்டு விட்டது, எமது முன்னோர்கள் இவ்வாறான அதிவேக விமானங்களைப் பயன் படுத்தினர் என்றும்.

உலகின் ஒரு மூலையில் இருந்து இன்னோர் மூலையில் உள்ள இடத்தை வீட்டில் இருந்தபடியே காணொளி போன்று(StreetView) பார்த்தல். பாட்டி கூறும் பழைய கதைகளில் வரும், தேவதைகள் அரக்கிகள் போன்றன, ஒரு கண்ணாடிக் குவளை போன்று ஒன்றை வைத்து தமக்குத் தேவையானவர்கள் எங்கே இருக்கின்றனர் என்று பார்த்தனர் என்று கூறக் கேட்டோம்.

இப்படி இன்று உள்ள அனைத்து நவீன தொழில்நுட்பங்களும் எம் முன்னோர்களும் பயன்படுத்தி உள்ளனர். அல்லது அப்படியாக பயன்படுத்த முடியும் என்று ஒரு சிந்தனைக்கு உட்பட்டவர்களாகவேனும் இருந்திருக்கவே வாய்ப்புள்ளது.

ஆனால் இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டிய விடையம் என்ன என்று பார்த்தீர்கள் என்றால். இப்படி அவர்கள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தைப் பற்றி எழுதியவர்கள் அதனால் சூழல் மாசு என்று எழுதவில்லை.

தொடர்ச்சி 22ம் பக்கம்


ஓம் சிவசக்தி ஜோதிட நிலையம்

From KERALA
IS NOW IN DORTMUND - GERMANY
FACE READING 100%
Solutions within 3 Days 100%

பத்திரகாளி அம்மன் பூஜாரி
பண்டித் காளிதாஸ்

குடும்பப்பிரச்சினைகள்,கணவன் மனைவி உறவு, உடல்நிலை வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல் பிரச்சினைகள் ,படிப்பு, வியாபாரம், உங்களுக்கு ஏற்ற அதிட்ட எண்கள், மற்றும் பலபிரச்சினைகளுக்கும் தீர்வுகாணலாம்.

**உங்கள் முகம்,கைரேகை இவற்றைவைத்து உங்கள் எதிர்காலம் துல்லியமாகக் கூறப்படும்**

ஆங்கிலம், தமிழ், கிந்தி, ஆகியமொழிகளில் பேசலாம்
வாரத்தில் 7 நாட்களும்
காலை 10:00 முதல்
மாலை 8:00 மணி வரை

+49(0)15213504803
+49(0)15145849222
Rheinischestrasse 80
44137 - Dortmund - Germany



Adhaven Beauty Palar
E-mail: b.pirathini@gmail.com

Eyebrow threading
புருவம் திருத்தம்செய்தல்
Bridal make up
மணப்பெண் அலங்காரம்
Facials
முகப்பொலிவு
Hairstyle
சிகை அலங்காரம்
pimples threadment
முகப்பருசிகிட்சை

சேலை
கட்டபழக்கப்படும்
பூமாலை
கட்டிக்
கொடுக்கப்படும்
Aleo vera Facial 25Euro
Gold Facial 34Euro
Saffron Facial 34Euro
Chat Conversation End

Tel. 0176 72787821
0234 3258759

புதிய முகவரி: 1.OG
Brückstr.20-26
44135 Dortmund






லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

Rising Sun Hotel & Restaurant

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K
Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு



ஆனால் காபன் மொனொக்சைட் என்பது பலரால் அறியப்படாத ஒரு மூலக்கூறு ஆகும் அது ஒரு நச்சு வாயு ஆகும். அதைக் கூட எம் முன்னோர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்பதற்கு சான்று, இரவில் மாமிச உணவைக் கொண்டு செல்லும் போது அதனுடன் ஒரு கரித் துண்டையும் சேர்த்துக் கொண்டு செல்லவேண்டும் என்று சொல் வார்கள் இதற்கான உண்மைக் காரணம்,

கரித் துண்டு காபன் மொனோக்சைட்டை உறிஞ்சி அதன் நச்சுத் தன்மையை நீக்குவதே ஆகும். 18ஆம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப் பட்டது இந்த மூலக்கூறு. எம் முன்னோர்களால் என்றோ இதற்கு தீர்வும் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. ஆனால் அனைத்தும் சுத்தமான தமிழிலோ அல்லது சுற்றிவளைத்துத் தமிழிலே கூறியுள்ளார்கள். அந்த அர்த்தங்களை புரிந்து கொண்டால் மாசில்லாமல் தொழில் நுட்பத்தை விருத்தி செய்வதெப்படி என்று கண்டு பிடிக்கலாம்.கற்க கசடறக் கற்பவை கற்றபின்- நிற்க அதற்குத் தக.

**21 ம் பக்கத் தொடர்ச்சி...**

இன்றும் கூர்ந்து கவனித்தால் எம்மவர்களால் பயன்படுத்தப் படும் சூழல் மாசு படுத்தும் பொருட்களாகிய பிளாஸ்டிக் போன்ற பொருட்கள் முன்னோர்கள் வசித்த இடத்தில் இருந்து புதைபொருள் ஆராச்சியாளர்கள் எடுக்கும் பொருட்களில் கிடைப்பதில்லை. இந்த அதி நவீன தொழில் நுட்பம் என்று நாம் கூறும் வார்த்தையை அவர்கள் தவவலிமை இறைவன் அருளிய சக்தி என்று கூறுகின்றனர். நாம் மின் சக்தி உதவியால் அனுபவிக்கும் அனைத்து அனுகூலத்தையும் அவர்கள் இறைசக்தி என்ற கருப்பொருள் உதவியில் அடைந்துள்ளனர்.
உதாரணத்திற்கு திருநாவுக்கரசரை சுண்ணாம்பு அறையில் அடைத்து வைக்கும் போது அவர் இறை சக்தியின் உதவியால் அந்த அறையில் குளிர்மையை உணர்ந்தார் என்று அனைவரும் மூன்றாம் வகுப்புப் சமயப் புத்தகத்தில் படித்துள்ளோம்.

இதை எவ்வாறு எம் இன்றைய வாழ்வுடன் ஒப்பிடமுடியும்?
சூரியனின் அதிக வெப்பமான கோடை காலத்தில் மின்சக்தியின் உதவியால் குளிரூட்டி மூலம் அறையை குளிர்மைப் படுத்துகின்றோம்.
இப்போது புரிகின்றதா? மொழியின் ஆற்றலை உண்மையாக உணராதபடியால், பல புதிய தொழில் நுட்பத்தை கண்டு பிடிப்பதை விட்டுவிட்டு, கடவுள் என்பது மூட நம்பிக்கை என்று சொல்லி எம் முன் னோர்களின் பல கண்டு பிடிப்புக்களை நாம் மறைத்துவிட்டோம். உதாரனத்திற்கு காபநீர் ஓட்சைட் என்பது அனைவரும் அறிந்ததே எமது வெளிமூச்சுடன் வெளியேறும் மூலக்கூறு ஆகும்.






# பிரித்தானியாவில் கடுமையான குழவரவுச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது

**வீடுகளை வாடகைக்கு எடுப்பவருக்கு வதிவிடவுரிமை இருக்கின்றதா என பரிசீலிப்பதற்கான உரிமையை வீட்டு உரிமையாளருக்கு வழங்குகின்றது.**

பிரித்தானியாவில் கடந்த மாதம் 13ம் திகதி முதல் புதிய குடிவரவுச் சட்டமொன்று (Immigration Act 2016) அமுலுக்கு வந்துள்ளது. இச்சட்டமானது அந்நாட்டுக்கு குடிபெயர்ந்து நிரந்தர வதிவுடமை மற்றும் பிரித்தானிய குடியுரிமை பெறாதோர் தொடர்பிலான பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்துள்ளது.
முக்கியமாக அந்நாட்டில் சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்கள் அந்நாட்டின் நலன்புரி சேவைகளை அணுகுதல் வேலை செய்தல், வங்கிக் கணக்குகளை கையாளுதல் வாகன அனுமதிப் பத்திரங்களை எடுத்தல் மற்றும் வாடகைக்கு வீடுகளை எடுத்தல் தொடர்பில் மிகக் கடுமையான விதிமுறைகளைக் கூறுகின்றது.-

இச்சட்டத்தின்படி பிரித்தானியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து வேலை செய்வது குற்றமாகும். சட்டவிரோதமாக தங்கியுள்ளோருக்கு வேலைகொடுக்கும் வேலை தருனர்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்தல். வீட்டு உரிமையாளர்கள் தம்மிடமுள்ள வீடுகளை வாடகைக்கு எடுப்பவருக்கு வதிவிடவுரிமை இருக்கின்றதா என பரிசீலிப்பதற்கான உரிமையை வழங்குகின்றது.

குடிவரவு அமுல்படுத்தல் அதிகாரிகளுக்கு சந்தேகநபர் தொடர்பில் அவரது உடைமைகள் மற்றும் வசிப்பிடத்தில் சோதனை செய்வதற்கும் அவரது அடையாளத்தை உறுதிசெய்யும் ஆவணங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்குமான உரிமையைக் கொடுக்கின்றது.

பிணையில் விடுவிக் கப்பட்டுள்ள வெளிநாட்டு குற்றவாளிகளுக்கு இலத்திரனியல் செருகிகளைப் பூட்ட (Electronic Tag) உரிய அதிகாரிகளுக்கு உரிமையை வழங்குகின்றது.

அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஆதரவற்ற நிலைமையிலுள்ள நபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை வழங்க தீர்மானிக் கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் தொடர்ந்துவரும் குடிவரவு நெருக்கடியை கருத்தில் கொண்டு பிரித்தானியாவுக்குள் நுழைந்த அநாதரவான சிறுவர்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


ஐரோப்பிய ஒன்றிய நாடுகளல்லாத வெளிநாட்டு திறமைசாலிகளை வேலைக்கமர்த்தும் தொழில் வழங்குனர்களுக்கு தீர்வை விதிக்கும் நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளது.



நடமாடும் கைதிகள்? Electronic Tag

வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணும் பொதுச் சேவையிலுள்ளோர் சரளமாக ஆங்கில மொழியைப் பேசுபவர்களாக இருத்தடட வேண்டும்.

சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களை நாடுகடத்துவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குடிவரவுச் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்கின்றது போன்ற வரையறைகள்இ கட்டுப்பாடுகளை அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.
நன்றி தமிழர்தகவல் கனடா



Electronic Tag




## அவரவர் அவசரம்

ராம் வேலை இழந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. காலையில் நடந்த நேர்முகப்பரீட்சைக்கு மாலைக்குள் முடிவு சொல்வோம் என்றார்கள். பதிலுக்காகக் காத்திருந்தான்.

தொலைபேசி அடித்தது. பதறியபடி எடுத்தான். மறுமுனையில் இலங்கையில் இருக்கும் அண்ணா.


“மகளுக்கு கலியாணம். முடிஞ்சதை அனுப்பு.”


வங்கிக் கணக்கை அண்ணா சொல்லுகையில் ராமின் கைபேசி அடித்தது.
“அண்ணா... லைனிலை இருங்கோ”
கைபேசியில் வேலை கிடைக்கவில்லை என்ற செய்தி.
மீண்டும் ”அண்ணா...” என்ற போது மறுமுனையில் ரெலிபோன் வைக்கப் படிருந்தது.



# Thushi -Deko

உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்..... Christal mandapa Set round Rada Krishna Stage and Raja Gopuram



Elephant Stage

Thushiyanthan. Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13

## நன்றி நவிலல்

துஷ்யந்தன்-கல்பனா

யேர்மனி -வேறல் (Werl) நகரில் 11.06.2016 சனிக்கிழமை எங்கள் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்த, உற்றார், உறவினர், நண்பர்கள்,அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்



அன்புடன்
**துஷ்யந்தன்–கல்பனா** தம்பதிகள்

திரு.திருமதி திருச்செல்வம் குடும்பத்தினர்
Castrop-Prauxel -Germany

திரு.திருமதி சிறிசெல்வநாதன் குடும்பத்தினர்
Drenstreinfurt -Germany

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

உங்கள் தாய் மொழியில்....

# HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ Gothaer

## Kaneen Electronics

16 வது ஆண்டு நிறைவான சேவை

Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

## Nimal HD

Film Style Cinematography
nimalvideo@gmail.com

Videography | Photography | Graphic Designing
Video Editing | Photo Album Making
3D Logo Creating | 3D Logo Annimation
Web Development | Add film | Visual fx
Event entertainment

தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
01776 794 261



உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் கலை விழாக்கள மனதோடு நிற்க ஒளிப்பதிவு செய்து தரப்படும்! 45 நாட்களில் கிடைக்கும்!

## புனித யாத்திரை

## லூட்ஸ் மாதா– போத்துக்கல் பார்த்திமா




24.07.2016 - 02.08.2016
( 10 தினங்கள்)

லூட்ஸ்மாத போத்துக்கல் பார்த்திமா - ஸ்பெயின் யாகப்பர் கல்லறை இவற்றைப் பார்வையிடலாம்.உணவு, தங்குமிடவசதி அனைத்தும் உள்ளடக்கிய புனிதப் பயணம்.
தங்குமிட வசதிகள், சொகுசு பேருந்துச் சேவை
மூன்று நேர உணவு,10 நாள் பயணத்திற்கும்
தனி நபர் 395 யூரோ
சிறுவர் 5-11 வரை 355 யூரோ
குழந்தை 0-4 வயது வரை 225 யூரோ
பஸ்பயணத்திற்கு மட்டும் 250 யூரோ

Tel: 0157 709 880 72
Tel: 0521 399 3855

தொடர்புகளுக்கு:ஒழுங்கமைப்பாளர் Noman

# மாயமிது வாழ்வெனினும் மரணமது முடிவல்ல!

**என் அன்பில் கலந்த நண்பர்**
**ஊடகச் செம்மல் அமரர் வீ.ஆர்.வரதராஜா அவர்களுக்கு!**
**இந்துமகேஷ்**
**அதற்குள் என்ன அவசரம் வந்தது வீ ஆர். வீ**






கள்ளமில்லா உங்கள் அன்பில் கலந்திருந்த எங்கள் இதயங்களை
வேதனைத் தீயில் வேகவைக்க எப்படித் துணிந்தீர்கள்?

காரணங்கள ஏதுமின்றி காரியங்கள் எதுவுமில்லை இவ்வுலகில்!
எல்லாவற்றுக்கும் ஏதோவொரு காரணம்
எங்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் கூடத்தான்!

வந்து பிறந்ததற்கான காரணத்தைக் கண்டறிந்து வாழ்பவர்கள்தான்
மாமனிதர்களாக
வரலாற்றில் தங்கள் பெயர்பதித்துப் போகிறார்கள்!
அந்த வரிசையில் நீங்களும் இன்று!
என்நாடு, என்மக்கள், என்மொழி என்று
இதயசுத்தியோடு எப்போதும் இயங்கியவர் நீங்கள்!
புலம்பெயர்ந்த பின்னால்
அகதிகளாய் ஆனோமே என்று அழுது புலம்பாமல்
வெளிநாட்டு மோகத்தில் வீழ்ந்து மனம் புரளாமல்
தாயக விடுதலை நோக்கி தளராது பாடுபட்ட
நம்மவர்களில் முன்னவர் நீங்கள்!
எழுதுகோல் ஏந்திய என்போன்றவர்களுக்கு இணையற்ற தோழனாய்-
எதிர்காலச் சந்ததிகளும் தமிழர்களாய் வாழ்ந்திட அரும்பணியாற்றுகின்ற
தமிழாலயத்தின் வடமாநில பொறுப்பாளராய்-
கொண்ட கொள்கையில் பற்றுறுதி கொண்ட பண்பாளராய்-
மாற்றுக் கருத்தாளர்களையும் மாறாத புன்னகையோடு
வசப்படுத்திக் கொள்ளும் மாண்புமிகு மனிதராய்-

ஊணுறக்கம் கருதாது இரவுபகல் பாராது
தாயகத்தின் கனவோடு சலியாது உழைத்திட்ட
உங்கள் விழிகளில் நீளுறக்கம் இன்று நிலையாகிப போனதேன்?

உடல்நலக் குறைவால் நீங்கள் உயிர் பிரிந்தீர்கள் என்னும் காரணத்தை
நம்புதற்கு கடினம் எனக்கு!
உற்ற நண்பராய் உங்களை நான் உணர்ந்திருந்தேன்!
ஈராண்டின் முன்னே நீங்கள் உங்களை இழந்த உண்மை
நேரிலே கண்டிருந்தேன் - நெஞ்சம் பரிதவித்தேன்!

கண்ணின் மணிபோலும் கலந்திருந்த உங்கள் உயிர்க்
காதல் மனையாளைக் காலன் பறித்த தினம்-
உயிரிழந்த உடலாக உங்களையே நான் அன்று கண்டேன்.

என்னைத் தனியே விட்டு எங்கும் அவள் சென்றதில்லை
அவளைப் பிரிந்து நானும் அரைக்கணமும் இருந்ததில்லை
இன்றவளை விட்டுவிட்டு எத்தனைநாள் நானிருப்பேன்
இன்னும் சிலநாளில் என் கதையும் முடிந்துவிடும்!"

-சொன்னதுபோல் கதைமுடித்து சொல்லாமல் சென்ற உங்கள்
எண்ணத்தின் வலிமைதனை இந்நேரம் உணருகின்றேன்!

வீட்டை நினைப்பவர்கள் நாட்டை நினைப்பதில்லை
நாட்டை நினைப்பவர்கள் வீட்டை நினைப்பதில்லை
- இப்படிச் சொல்பவர்கள் தம்கடமை மறப்பதுண்டு
இரண்டையும் நினைப்பவர்கள் உங்களைப் போல் எவருண்டு?

மனை, மக்கள், மருமக்கள், பேத்திகள் என்றிவரோடு
உறவான நண்பர்கள், சுற்றத்தார் சூழ்ந்திருக்க
நிறைவான இல்வாழ்வு இறைவன் அளித்த வரம்!

வாழ்கின்றவரை எங்கள் வாழ்வெல்லாம் பிறர்க்கென்று
சலியாது ஆற்றிநின்ற சமூகப் பணி உங்கள் தவம்!

தாயகத்து உறவுகட்காய் சலியாது உழைத்த உங்கள்
நேயத்தை எங்கள் நெஞ்சங்கள் நினைவில் வைக்கும்!
மாயமிது வாழ்வெனினும் மரணமிது முடிவல்ல
வாழ்ந்திருப்பீர் எம்முடனே - வரலாறாய் என்றென்றும்!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனிடம் மன்றாடும்
உங்கள் அன்பில் கலந்த இலக்கியச் செம்மல்
இந்துமகேஷ்
(பூவரசு கலை இலககியப்பேரவை -ஜெர்மனி)
Bremen, Germany

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இயற்கை ஆயுள்வேத ஐரோப்பிய நாடுகளுக்கு உகந்த
கேரளா இயற்கை மருத்துவம்
இந்தியா ஈரோடு - இலங்கை நல்லூர் - பிரான்ஸ் லாகூர்நெவ்
தொலைபேசி இல : 0091984225622З
குருநாத் ராம் லக்ஸ்மன்

இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,கைநாடி பார்த்து
உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்துவைக்கப்படும்.


முடி உதிர்தல்
சிக்கன் குனியாவால் காய்ச்சல்
தீராத கை-கால் வலி
ஆஸ்துமா,அலர்ஜி
உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க
மூட்டுவலி,பயம்,ஞாபக சக்தி
பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சனை
தோல்வியாதி(சொரியாசிஸ்)
சிறுநீரகக் கோளாறு
இருதயக் கோளாறு
பக்கவாதம்
நரம்புத் தளர்ச்சி
தலைவலி
காய்ச்சல்
சரவாங்கி
இரத்தக்கொதிப்பு
வாயுக் கோளாறு
உஷ்ணம்
நரம்புவாதம்
அல்சர்
வயிற்றுவலி
இடுப்புவலி
காக்காவலிப்பு
ஆண்மைகுறைவு
வெட்டைச்சூடு
ஜலகடு
உள்மூலம்
வெளிமூலம்
பகந்தரிமூலம்
கை-கால் குடைச்சல்
கழுத்துவலி
முகப்பரு
தேமல்
வெண்குஷ்டம்
டி.பி
வாதம்
மஞ்சள் காமாலை
கண்,காது
தொண்டை நோய்கள்
ஆறாத காயங்கள்

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.



Gartenstrasse 185, 41236 Mönchengladbach - Germany
0049 1517-5230649 // 0049 1521-8215707

Duisburg நகரில்
VTM MiniMarkt und Kiosk



உலருணவுப் பொருட்கள் கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்

துரித
பணமாற்றுச்
சேவை!

TEMPO MONEY TRANSFER
Ria MONEY TRANSFER

TEMPO,Ria ,இவற்றுடன்
இன்னும் பல
பண மாற்றுச் சேவைகள்...

இலங்கை, இந்தியா உட்பட உலகின்
எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில்
பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள்
நேரடியாகவும் மற்றும் அனைத்து
வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம்
செய்யலாம்.
inh:Pon.Vijayakumar

Mo-Sa:10.00 -20.00
Son:11.00-20.00
Neudorferstr 173
47057 Duisburg
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de



# சித்திரம் பேசு(ம்) தடி .........

**கனகசபேசன் அகிலன்**

நான் ,இன்று காலை எழுந்தவுடன் முதல் செய்தது எனது கல்லூரி கீதத்தை உரக்க, உணர்ச்சியுடன் பாடியது தான். அட பைத்தியமே, ,இப்படியெல்லாம் செய்கிறானே, என சிலர் நினைக்கலாம். ஆனால் எனது கல்லூரிக்காலத்தில் ,இதை ஒழுங்காக பாடாமல், எதோ கடமைக்காக பாடியதற்காக, என்னுள் ,இருந்த குற்ற உணர்வுக்கு வைத்தியமாக நான் ,இதை நினைக்கிறேன்!



,இது தான் எனது கல்லூரிக் கீதத்தின் முதல் பகுதி

வாழிய யாழ்நகர் ,இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

,இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
,இந்து மதத்தவர் உள்ளம்
,இலங்கிடும் ஒருபெருங் கலையகம் ,இதுவே
,இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் ,இதுவே பல
கலைமலி கழகமும் ,இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் ,இதுவே.......

பிரார்த்தனை மண்டபத்திலே, சங்கீதத்தை ஒரு பாடமாக படிக்கும் மாணவர்கள் சிலர் முன்னுக்கு நின்று கல்லூரிக் கீதம் பாடுவார்கள், நாங்கள் அதை திரும்பப் படிக்க வேண்டும். "வாழிய யாழ்நகர்" ....என்று தொடங்கும் போது வார்த்தைகள் வெறும் சோம்பலுடன் தான் வெளிவரும், ஆனால் "தலைநிமிர் கழகமும் ,இதுவே...." என்று ,இழுத்து முடிக்கும் போது எல்லோர் முகத்திலும் "அப்பாடா முடிந்து விட்டதே" என்ற ஓர் சந்தோச மும்,உற்சாகமும்!

யாழ் ,இந்துக் கல்லூரி, ,இந்து மதத்தை பேணுவதற்காகவும், தமிழில் கல்விபயிற்றுவதற்காகவும் என ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாக இருந்தாலும், ,இங்கு எல்லா மதத்தவரும் சரி சமமாகவும், சந்தோசமாகவும் கல்வி பயின்றார்கள், ,இன்றும் பயில்கிறார்கள். எமது கல்லூரிக்கீதத்தில் வருவது போன்று "பல கலைபயில் கழகமாக" ,இது திகழ்கிறது. ,இப்படி ,இங்கு பயிற்றப்படும் கலைகளில் சங்கீதமும், சித்திரமும் அடங்கும். நான் ,இந்தப் பாடசாலையில் படித்த காலத்தில் சித்திரத்தை அல்லது சங்கீதத்தை ஒரு பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும். எனக்கு மட்டுமல்ல பல மாணவர்களுக்கு ,இந்த ,இரண்டு பாடத்திலும் நாட்டம் ,இல்லை. கட்டாயம் ஒன்றைதெரிவு செய்தே ஆகவேண்டும் என்ற காரணத்தால் நான் சித்திரத்தை தேர்ந் தெடுத்தேன், அதற்கு ஒரு காரணம் "எனது அம்மாவிற்கு ஓரளவு ஓவியங்கள் வரையத் தெரியும் என்பது தான்". சங்கீதம் எனக்கு ஓரளவு விருப்பமாக ,இருந்தும் கூட அதை எடுக்காததற்கு பல காரணங்கள் உண்டு, சங்கீதம் படித்தால் தேவாரங்களை மட்டும் தான் பாடலாம், சினிமா பாடல்களை சரியாக முணுமுணுக்க ,இது உதவாது என்ற மூட நம்பிக்கை, "ச ரி க ம ப த நி ச "போட்டால் சக மாணவர்கள் எப்படி நினைப்பார்களோ? என்ற கேள்விக்குறி, ,இப்படிப்பல காரணங்கள்.

அப்போது எமக்கு பதின்மூன்று வயதிருக்கும், சித்திர பாடத்திற்கான வகுப்பறைக்கு செல்வதற்கு நாம் அதிபருடைய அலுவலகத்தை தாண்டித்தான் செல்ல வேண்டும், ,இப்படி ஒரு நாள் நாங்கள் செல்லும்போது வழமைக்கு அதிகமாக சத்தம் போட்டு விட்டோம், ,இது எங்களுக்கே தெரியாது. சித்திரப் பாடம் ஆரம்பித்து சில நிமிடங்களில் அதிபர் அவர்கள் தடியோடு எம்முன் நின்று கொண்டிருந்தார், அவரது பெயர் P.S. குமாரசுவாமி, P.S. என்றால் எல்லோருக்கும் தெரியும். ,இவர் ,இந்துவில் மாணவனாக ,இருந்து, ஆசிரியாராக ,இருந்து, பின்பு அதிபரானவர். பலரது பெரு மதிப்புகுரியவர்,மிகவும் ஆளுமை திறன் படைத்தவர், தூரத்தில் P.S வருகிறார் என்றாலே வகுப்புகளில் சத்தம் ,இருக்காது - ஒரு பயம் கலந்த மரியாதை. .ப்படியான ஒருவர் தடியோடு எம் முன் நின்றால் எப்படி ,இருக்கும்? அவர் வாயை திறந்து எம்முடன் பேசத்தொடங்கினார், " நீங்கள் ,இங்கு வரும் பொழுது உங்களில் சிலர் சத்தம் போட்டுகொண்டு வந்ததாக கேள்வி, யார் சத்தம் போட்டதென்று நீங்களே சொன்னால் அவர்களுக்கு மாத்திரம் அடி விழும், ,இல்லையெனில் எல்லோருக்கும் அடி விழும்" என்று கூறி முடித்தார். நாங்கள் "ஒற்றுமையின் சிகரங்கள்" என்பதால் எவரும் வாயை திறக்க வில்லை. எமது வகுப்பில் எல்லோருக்கும் அடி விழுந்தது, ஒரு மாணவனை தவிர! ஏனென்றால் அவன் மாத்திரம் தான் சங்கீத வகுப்புக்கு போயிருந்தான். (சிலவேளை அவன் போட்ட சத்தம், எங்கள் ,ரைச்சல்களுக்கிடையே, சங்கீதமாக கேட்டிருக்குமோ என்னவோ?) எனக்கு அன்று அடி விழுந்த பொழுது "பேசாமல் சங்கீதத்தையே படித்து தொலைதிருக்கலாம்" என மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். ஆனால் ,இப்போது நினைத்து பார்க்கிறேன் "சரியோ, பிழையோ P.S அவர்களின் கையால் அடி வாங்கியது ஒரு பாக்கியம்" - குட்டு வாங்கினாலும் மோதிரக்கையால் குட்டு வாங்க வேண்டும் என்று சொல்லுவார்கள் அல்லவா, ,இது அந்தவகையை சேர்ந்த அடி. பல வருடங்களுக்கு பிறகும் நினைத்துப்பார்கிறேன், எல்லாம் நேற்று நடந்தது போல் பசுமையாக ,இருக்கிறது, ,இன்றும் P.S ஐயா அவர்களை நினைத்தால் கண்ணீர் வருகிறது, அவர் அடியை நினைத்தல்ல, அவர் காலத்தில் நாங்களும் அவர் கண்காணிப்பிலும், அவர் வழி நடத்தலிலும் வாழ்ந்திருகிறோமே என்பதை நினைத்து!


அன்று கரும்பலகையில் எமது சித்திர ஆசிரியர் தன் தூரிகையால் எதையும் வரைந்திருக்கவில்லை ஆனால் அடியை எதிபார்த்து மௌனித்து நின்ற ஒவ்வொரு மாணவனது முகமும் அதிபர் திரு P.S குமாரசுவாமி அவர்களின் தடியெனும் தூரிகையால் தீட்டப்பட்ட பேசும் சித்திரங்கள் ஆகின!


ஆண்டுகள் பல கடந்து விட்டன, தொழில்நுட்ப வளர்ச்சியால், சித்திரம், சங்கீதம் என்ற பாடங்களைப் பற்றிய மாணவர்களின் அறிவு வளர்ந் திருந்தாலும், ,இப்பாடங்களுக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவம் ,இன்றும் அப்படியே தான் ,இருக்கிறது என்றுதான் நினைக்க தோன்றுகிறது. ,இதற்கு மேலே கூறியது போன்று பல காரணங்கள், இருக்கலாம். ,இப்பாடங்களை படித்தவர்களுக்கு தகுதியான தொழில் வாய்புகள் கிடைக்கபெறாதது கூட ஒரு காரணமாக ,இருக்கலாம்.

பணவருவாயையும், சமூக அந்தஸ்தையும் நோக்காக வைத்து நாங்கள் தேர்ந்தெடுக்கும் படிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், இப்படியான அரும் கலைகள் காலபோக்கில் அழிந்து போகலாம். சித்திரம் அல்லது சங்கீதம் படிக்கவேண்டும் என்றில்லாது, இருபாடங்களையும் எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் , இருந்தால் நல்லதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சித்திரம், சங்கீதம் போன்ற பாடங்களை படிப்பதினால் மாணவர்களுக்கு பலவிதமான நன்மைகள் உண்டு எனக் கூறுகிறார்கள். உதாரணதிற்கு, சில அமைதியான சுபாவம் உள்ள மாணவர்கள் ஓவியங்கள் மூலமாகத் தான் தம் உணர்வுகளை திறமையாக வெளிப்படுதுகிராகள், வெளி உலகுடன் பேசுகிறார்கள், சிலர் ,இக்கலையில் உள்ள ஈடுபாட்டின் ஊடாக வாழ்கையில் முக்கிய முடிவுகளை எடுக்கும் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள், ,இக்கலையில் உள்ள ஈடுபாடு மற்றைய பாடங்களிலும் அவர்கள் திறமையாக ,இருக்க உதவுவதாக ஆராச்சிகள் கூறுகின்றன. இது போன்று தான் சங்கீதமும், "சங்கீதம் பாடாத வாயுண்டா?" என்று ஒரு பாடல் வரியுண்டு. சந்தோஷம், துக்கம், கலாச்சார நிகழ்வுகள் ,இப்படி எல்லாவற்றிலும் சங்கீதம் மனிதர்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது.
சித்திரம், சங்கீதம் போன்ற கலைகளில் அறிவை வளர்த்தலும் அவற்றில் ஈடுபாடு கொள்தலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

'Education is not just about feeding the brain, Art and music feed the heart and soul'



# 8 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

## இறைவன் ஒருவனே !

இறைவன் ஒருவனே எனக் கூறும் திருமந்திரம் (இறைவணக்கம்) பாடல் எண் 1.

"ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே".

இப்பாடலின் பொருள் "ஒன்றாயிருப்பவன், அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப்பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே. இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல், இயற்கை உணர்வடைதல், முற்றும் உணர்தல், பற்றற்றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில்லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்." என்பதாகும்.
இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 33

"பதிபல ஆயது பண்டு இவ்வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்ல வல்லாரும்
மதிஇலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே".

இப்பாடலின் பொருள் "இவ்வுலகம் முன்பு பல தெய்வ வழிபாடுகளை உடையதாயிருந்தது. உண்மை அறிவற்றவர்கள் அந்தப் பல தெய்வங்களை வழிபடப் பல விதிகளையும் வகுத்தனர். பலவகைத் தோத்திரங்களையும், வழிபாடுகளையும் செய்யும் இவர்கள் அறிவில்லாத மூடர்கள். இவர்கள் துன்பப் பிறப்பெடுத்துத் துயரப்படுவார்கள்" என்பதாகும்.

இதேகருத்தை வலியுறுத்த மூன்று ஐந்தென நின்றவன் ஒருவனே எனும் பாடல் எண் 110
"சோதித்த பேரொளி மூன்றுஐந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவது அறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித்து அவரைப் பிதற்றுகின் றாரே."

இப்பாடலின் பொருள் "எங்கும் நீக்கமற நிறைந்து, பொங்கிப் பரவி நிற்கின்ற பேரொளிப் பிழம்பான சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழிலால் பிரம்மன், திருமால், சிவன் என மூன்றாகவும், ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலால் பிரம்மன், திருமால், சிவன், உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் என்று ஐந்தாகவும் இருக்கின்றான் என்பதை மூடர்கள் அறிவதில்லை. அவரவர் செயல்களுக்கு (கிரியைகளுக்கு) ஏற்ப சிவன், திருமால், பிரம்மன் என சிவபெருமான் தோன்றுகின்றார் என்பதை அறியாது, அவர்களை வேறு வேறு தெய்வங்களாக எண்ணி வீணே உளறிக்கொண்டிருக்கிறார்கள்." என்பதாகும்.
விண்ணும் மண்ணும் சிவபெருமானே எனக் கூறும் பாடல் எண் 10

"தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆமே."

இப்பாடலின் பொருள் "இறைவன் இவனே, விரிந்தகன்ற மண்ணகமாகவும், உயர்ந்து பரந்த வானகமாகவும் இருக்கின்றான். சுட்டெரிக்கும் அக்கினியாகத் திகழும் இவனே சூரியனாகவும், சந்திரனாகவும் உள்ளான். மழையாய்ப் பொழிந்து உலகின் வாட்டத்தைப் போக்கும் தாயாக இருந்து தண்ணருள் புரியும் இவனே மலையாகவும், மா கடலாகவும் உள்ளான்." அதாவது சூரியன், சந்திரன், பஞ்சபூதங்கள் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) எல்லாம் சிவபெருமானே எனக் குறிப்பட்டுள்ளது.


எல்லாம் கடந்தவன் எங்கும் நிறைந்தவன் எனக் கூறும் பாடல் எண் 14
"கடந்துநின் றான்கம லம்மலர் ஆதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க்கு அப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே."

இப்பாடலின் பொருள் "கமல மலராகிய தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மாதி தேவர்களையும் கடல் போலும் நீல நிற மேனி உடைய மாயவனாம் திருமாலையும் தாண்டி, அதற்கு அப்பாலும் உள்ள அண்டங்கள் பலவற்றையும் தாண்டி, அப்பாலுக்கும் அப்பாலாய் நிற்கின்ற இறைவன் எங்கும் நிறைந்த பரம் பொருளாகவும் இருக்கின்றான்." அதாவது இறைவன் எங்கும் நிறைந்தவன், எல்லாம் கடந்தவன், அவன் இல்லாத இடமில்லை என்பதாகும்.
சிவனே எல்லாம் எனக் கூறும் பாடல் எண் 6

"அவனை ஒழிய அமரரும் இல்லை
அவன்அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன்அன்றி மூவரால் ஆவதுஒன் றில்லை
அவன்அன்றி ஊர்புகு மாறு அறியேனே".

இப்பாடலின் பொருள் "சிவன் இல்லாமல் தேவர்கள் இல்லை. சிவனருள் இல்லாமல் செய்யப்படும் மேலான தவம் எதுவும் இல்லை. சிவன் இல்லாமல் பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோரால் எதுவும் செய்ய இயலாது. சிவன் அருள் இல்லாமல் விண்ணுலக வாழ்வடையும் வழியை நான் உட்பட எவராலும் அறிய முடியாது" என்பதாகும்.


ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்
[டோட்மூண்ட் சிவன் கோவில்]
தேர்த் திருவிழா
கொடி ஏற்றம் 09.07.2016
தேர் :17.07.2016 ஞாயிற்றுக்கிழமை
Kiefer Str.24
44225 Dortmund/Germany



தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!









நடக்கத் தொடங்கினால் எவ்வளவு சுவையான காட்சிகளையும் செயற்பாடுகளையும் கண்டுகொள்ளலாம்!

# நடை நடையாய்...

## நடை நடையாய் ....

என்னுடைய இதய அறுவை மருத்துவச் செயற்பாடு முடிந்த பின்னர், ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நடக்கவேண்டும் என மருத்துவர் கூறினார். மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பிய அடுத்தநாள் காலையில் நடப்பதற்குப் புறப்பட என்னுடைய பாதுகாப்புக்காக தானும் கூட நடக்க வருவதாகக் கூறி துணைவியாரும் புறப்படலானார் (“எள்ளேன் காயுது……….”என்று எவரும் எண்ணக்கூடாது).

முதல்நாள் நடக்கத் தொடங்கியபோது இடையில் இருவர் எங்களைப்போல நடந்து வருவதைக் கண்டு மகிழ்ந்தோம். அவர்களுள் ஒருவர் உயரமானவர். ஆனால் வயிறு சற்றுப் பருமனாயிருந்தது. ஏன் நடக்கிறார் என்பதை ஊகித்துக்கொண்டோம். (சில நாட்களின் பின் அவருடைய வயிற்றுப் பருமன் சற்றுக் குறைவடைந்ததைக் கண்டு மகிழ்ந்தோம்).



இவ்வாறு நடக்கும்போது என்னிடம் படித்த மாணவர்கள் பலர் வாகனங்களில் எங்களை முந்திச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து “ஏன் நடக்கிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?” என்று கேட்டு எங்களைத் தங்கள் வாகனங்களிலே ஏற்றத் தயாராகிவிடுவர். இது “மருத்துவ நடைப்பயிற்சி” என்று நாம் கூறுகின்றபோது அவர்களுக்கு சிறிது ஏமாற்றமாகவே இருக்கும். பேருந்துக் காரரும் தங்கள் பரிவைக் காட்டத் தவறுவதில்லை. வேகமாக வரும் பேருந்து எங்கள் பக்கம் திடீரென நிறுத்தி “ஐயா அம்மா ஏறுங்கோ! ஏன் நடக்கிறீர்கள்” என்பார்கள். நடைப்பயிற்சி என அறியும்போது அவர்களுக்கும் ஏமாற்றந்தான்.

கோண்டாவிலிலிருந்து உரும்பிராய் அல்லது திருநெல்வேலிப் பக்கமாக பலாலி வீதியோரம் நாம் நடப்பது வழக்கம். இதை அறிந்தவர்கள் நமக்கு முன்னேற்பாடாக வீதியோரம் நாய்கள் கவனம் என அறிவுரை சொன்னார்கள். முதல் நாள் நாம் போகும்போது பல இடங்களில் நாய்கள் குரைத்தன. இரண்டாம் நாள் இவ்வாறு நாய்கள் குரைத்த இடங்களை நினைவில் வைத்து இந்த நாய்களுக்கு “காலை வணக்கம்” என்று கூறிச் சென்றோம். அடுத்த நாளும் அப்படியே. மூன்றாம் நாள் அவை பேசாமலிருக்க நாமும் எதுவும் பேசாமல் சென்றோம். ஆனால் ஒரு நாய் வித்தியாசமான ஒலியை ஏற்படுத்தியது.

உடனே நாங்கள் நின்று காலை வணக்கம் சொன்னோம்.
ஒலிகள் அடங்கின.
எங்கள் மொழி அவற்றுக்கு விளங்கிவிட்டது என எண்ணி மகிழ்ந்தோம்.

பின்னர் ஒவ்வொரு நாளும் காலை வணக்கம் சொல்லிச் சென்றோம்.
தமிழ் விளங்காத சில நாய்களும் இருந்தன.
அவற்றுக்கு “Good Morning” சொன்னோம். இவை இரண்டும் விளங்காமல் ஏதாவது ஒன்று ஒலியெழுப்பினால் துணைவியார் “ஒஹாயோ கொஸைமஸ்” என்று ஜப்பானிய மொழியிலே சொல்வார்.

நாம் நடைபயிலத் தொடங்கி இரண்டாம் நாள் இடையிலுள்ள ஒரு சிறு கடையில் ஒரு கீரைப்பிடி வாங்க துணைவியார் சென்றார்.

கடைக்காரரின் தந்தை வெளியே வந்து “உங்களைப் பார்த்தால் எங்களுடைய தந்தையார்போல உள்ளீர்கள்” என்றார்.

அடுத்தநாள் நாம் நடந்து வருவதைப் பார்த்த அவர் “ஐயாவும் அம்மாவும் ட்ரெயினிங் எடுக்கிறீங்க போல இருக்கு” என்றார். நடைப்பயிற்சி என்ற சொல் அவருக்கு வரவில்லைபோலும். எதையோ கேட்க விரும்புகிறார். ஆனால் கேட்கவில்லை.

இரண்டு நாள்கள் கழிந்த பின்னர் எங்களைக் கண்டபோது “ஏன் நடக்கிறீர்கள்?” என்று நேரடியாகக் கேட்டுவிட்டார்.
என்னுடைய அறுவை மருத்துவம் பற்றிக் கூறியபோது உறைந்து போனார். அதன் பின்னர் அவர் மிகுந்த பயபக்தியுடன் செல்லுவது வழக்கம்.

நடக்கத் தொடங்கினால் எவ்வளவு சுவையான காட்சிகளையும் செயற்பாடுகளையும் கண்டுகொள்ளலாம்!








Akchaya
Digital Photography
Akilan wedding planner
உங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டம்
மணவறை அலங்காரம். நாதஸ்வரம். பூ மாலை. கேக், சிற்றுண்டி, குடிபானங்கள்,
உணவு வகைகள், மேக்கப், வாகன ஒழுங்குகள் மற்றும் ஐயர் பேன்ற அனைத்து
தேவைகளையும் செய்துதரக் காத்திருக்கின்றோம்!
எமது வாடிக்கையாளர்களுககு ஓர் அரிய வாய்ப்பு
எம்மிடம் மணவறை, மேடை அலங்காரம், மேசை அலஙக்காரம்
மற்றும் வீடியோ, புகைப்படம் பதிவு செய்து கொள்பவர்களுக்கு
1 Album இலவசமாகச் செய்து தரப்படும்...!
20.01.2017 - 20.03.2017
www.akchayadigitalphotography.eu
இச் சலுகை குறிப்பிட்ட
காலம் மட்டுமே
என்பதையும் மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்
akchaya photography
Grüner Weg-6 53474 Bad Neuenahr-AW, GERMANY
contact : E,Akilan
Professional Photography
e-mail:akchayadigitalphotography20@gmail.com
Tel. : 02641 91 68 98
Mobile : 0163 36 40474






சந்திரகௌரி சிவபாலன்(கௌசி) அவர்கள் எழுதிய முக்கோணமுக்குளிப்பு என்னும் கட்டுரைத்தொகுப்பு யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரால் 11.06.2016 அன்று யேர்மனி டோட்முண்ட் நகரில் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் கனடா நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ஓய்வு பெற்ற ஆசிரியரான திருமதி ரஞ்சிதம் கந்தையா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள். இந்நூலின் அறிமுகவிழா 29.04.2016 அன்று இலண்டனிலும் 21.05.2016 அன்று மலேசியாவிலும் இடம்பெற்றது.

**யேர்மனி – இணுவையூர் ஒன்றியத்தின் மாபெரும் கலை மாலை சுவெற்றா நகரில் 28.05.2016 சிறப்பாக நடைபெற்றது.**





Warendorf மாவட்டத்தில்

மாபெரும் அங்காடி

M point Supermarkt

e.mail: mpointsupermarkt@yahoo.de

துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS MONEY TRANSFER
Email : shansure7480@yahoo.de






Catering & Partyservice

உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள், மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்





M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )

Tel: 02583 30 30 300 0179 48 555 54

# பழமொழிகளில் பண்பாடு




(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

## ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் பெறும்

நமது முன்னோரின் முதுமொழிகள் இன்றைய காலத்து வாழ்வியலுக்குப் பொருந்துமா எனக் கேட்பவர்கள் பலர் உளர். குறிப்பாக இளைய தலைமுறை யினர் இக் கேள்விக்கான விடையைத் தேடி நிற்கின்றனர். தொழில்நுட்ப வளர்ச்சியால் கையில் ஒரு சிறு பொறியை வைத்தே வையகத்தை வலம் வரும் அவர்களுக்கு விளக்கம் வேண்டும். காட்டு விலங்கான யானை (மருவி ஆனை எனப் பேச்சு மொழியிலே வழங்கப்பெற்றது) மனித வாழ்வியலோடு பெரிதும் தொடர்புற்றிருந்தது. மன்னன் முதல் மக்கள் வரை யானையைப் பயன்படுத்தும் நிலை இருந்தது.

யானை காட்டு விலங்குகளிலே பெரியது. உடல் வலுவும் கொண்டது. கூட்டமாக வாழும் குணவியல்புடையது. அதன் தோற்றம் அச்சந் தருவது. மற்ற விலங்குகளுக்கு இல்லாத சிறப்பானதொரு உடலுறுப்பாகத் தும்பிக்கையை உடையது. அக்கையால் பெருமரங்களையே பெயர்த்து எறியும் ஆற்றலுடையது. அதனுடைய வண்ணம் கறுப்பாக இருந்தாலும் தோற்றத்தாலும் செயற்பாட்டாலும் எல்லோரையும் வியக்கவல்லது. மனிதன் காட்டுவாசியாக வாழ்ந்த காலத்திலேயே யானையைத் தன்னுடைய வாழ்வியலோடு இணைத்துக் கொண்டான். யானையைப் பழக்கிப் பல பணிகளைச் செய்வித்தான். பல மரங்களை வெட்டி அவற்றைத் தூக்கி அல்லது இழுத்துச் செல்வதற்கு யானை பெரிதும் துணையாக இருந்தது.

காலப்போக்கில் மனிதன் தனக்குரிய உறைவிடங்களை அமைக்கும்போதும் யானையின் ஆற்றலைப் பயன்படுத்தினான். பெரிய மாடமாளிகைகளை அமைக்கும் போது யானையின் மூலம் தேவையான பொருட்களை எடுத்துச் சென்றான். அரச அமைப்பு உருவானபோது யானைப் படையென ஒரு படையும் உருவாகியது. யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என நால்வகையான படைகள் ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டன. அதில் யானைப்படை பகைவருடைய கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கத் துணை செய்தது.

பண்டைய தமிழிலக்கியங்கள் யானை மனித வாழ்வியலோடு இயைபுபட் டிருந்த நிலைகளை வெகு சிறப்பாகச் சொல்லோவியங்களாகத் தீட்டியுள்ளன. புறநானூறு என்னும் தொகுப்பு நூலிலே ஒருபாடல் எல்லோருடைய கடமைகளையும் விளக்கிக் கூறுகிறது. பெண்ணின் கூற்றாக அமைந்த அப்பாடலில் கூறப்பட்ட கடமைகள் வருமாறு:

ஈன்று புறந்தருதல் தாயின் கடமை
சான்றோனாக்குதல் தந்தையின் கடமை
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லரின் கடமை
நன்னடை நல்கல் வேந்தன் கடமை

போரிலே களிற்றைக் கொன்று பெயர்தல் காளையின் கடமை.
இங்கு புலவர் யானைப்படையை அழிப்பது ஒரு வீரனின் கடமை எனக் கூறியுள்ளார். தாய், தந்தை, தொழிலாளி, வேந்தன் எனத் தொடர்புற்ற வாழ்வியலில் யானையை அழிக்கும் பொறுப்பை மகன் ஏற்க வேண்டும். மனித வாழ்வியலுக்குப் பல நிலைகளிலே தொடர்புற்றிருந்த யானையை அழிப்பதும் கடமையெனக் கருதப்பட்டது. இந்நிலையில் ஆண் யானைகளே போரில் கொல்லப்பட்டன. பிற்காலத்திலே போர்க் களத்திலே ஆயிரம் யானைகளைக் கொன்ற மன்னனது வீரத்தைப் புகழ்ந்து பாடும் 'பரணி' என்ற இலக்கிய வடிவம் தமிழிலே தோன்றியுள்ளது. 'கலிங்கத்துப்பரணி' என்ற இலக்கியம் இன்று அதற்குச் சான்றாக உள்ளது.

ஆனால் யானையைக் கொல்லாமல் வழிபடுகின்ற ஒரு மரபும் தமிழரிடையே இருந்துள்ளது. 'ஆனைமுகத்தோன்' எனப் பிள்ளையாரை வழிபடும் மரபு இன்றும் உள்ளது. கரிமுகத்தான், தும்பிக்கையான், வேழமுகத்தான் என யானையின் பெயர் கொண்டு பிள்ளையாரை வழிபடுவர். இன்னும் நெற்செய்கைப் பண்பாட்டின் வளர்ச்சி நிலையில் சூடு மிதிப்பதற்கும் யானை பயன்பட்டுள்ளது.

மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனைகட்டிப் போரடிக்கும்
அழகான தென்மதுரை!

என்ற நாட்டார் பாடல் இதற்குச் சான்றாகவுள்ளது.



பழந்தமிழ்ப் பாடல்களிலே புலவர்களுக்குக் கொடைப் பொருளாக யானை மன்னரால் வழங்கப்பெற்றது. நாட்டுவளம் பற்றிப் பாடும் புலவர்கள் ஒரு யானை படுக்குமிடத்தில் ஏழு யானைகளுக்கு உணவளிக்கக் கூடிய பயிர் வளம் உண்டு எனப் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புடைய யானையைப் பிற்காலத்தில் ஆண்மகனுக்கு ஒப்பாக்கி அமைத்த முதுமொழியே "ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் பெறும்" என்பதாகும். ஆணின் உடல் நிறம் கறுப்பாக இருந்தாலும் அவனுடைய வலுவும் ஆற்றலும் பெரு மதிப்புடையவை எனக் கருதப்பட்டன.

குறிப்பாகத் திருமணம் என்னும் நடைமுறையில் இப்பழமொழி தொடர்புற்றிருந்தது. 'சீதனம் கொடுத்தல்' என்னும் நடைமுறை ஏற்பட்டபோது இம்முதுமொழி ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தப்பட்டது. திருமணம் பேசுகின்றபோது ஆண் மிகவும் கறுப்பாக இருந்தாலும் பரவாயில்லை அவனுக்கு ஏற்ற பொருள் வழங்கவேண்டுமென ஓர் எழுதாத சட்டம் இன்றும் தமிழரிடையே நிலவுகிறது. 'சீதனம்' என அவனுக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சிறப்புத் தகைமை ஆணுடைய உடல் வலுவுக்கு யானையின் உடல் வலு ஒப்பிடப்பட்டபோது கிடைத்தது.

ஆணின் செயற்பாடுகள் யானையைப் போல அமையுமென எதிர்பார்க் கப்பட்டது. தமிழர் வாழ்வியலில் பயிர்ச்செய்கைப் பண்பாடு நிலவியபோது இந்த ஒப்பீடு பொருத்தமாகவும் இருந்தது. நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யும் ஆண் வெயிலில் நின்று பணி செய்வதால் கரிய வண்ணமுடையவனாக இருந்தான். யானையைப்போலப் பல்வேறு நிலைகளில் உடலுழைப்புடையவனாகத் திகழ்ந்தான். ஆனால் மேலைத்தேயப் பண்பாடு தமிழரிடையே செல்வாக்குப் பெற்றபோது அரச பணியென ஒரு புதிய பணியிலே ஆண் இணைந்தான். அந்தப் பணிக்குரிய ஆடை மாற்றத்தையும் கைக்கொள்ளலானான். காற்சட்டை, மேற்சட்டை, தொப்பி, சப்பாத்து என அவனுடைய வேடப்புனைவுகளும் அவனுடைய தனித் தகைமைகளாகக் கணிக்கப்பட்டன.

ஆங்கிலமொழிப் புலமையும் அரச பணியும் ஆளை யானையோடு ஒப்பிடும் நிலைக்குத் தள்ளின. இந்த ஒப்பீட்டு நிலை திருமணச் சந்தையிலே அவன் விலைபேசும் விற்பனைப் பொருளாக மாற வைத்தது. வலுவுள்ள யானையை விலை கொடுத்து வாங்குவது போல செல்வாக்குள்ள ஆணையும் விலை கொடுத்து வாங்கிப் பெற்றோர் தமது பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இந்த வணிகமரபு தமிழர் பண்பாடாக இன்று வேரூன்றத் தொடங்கியுள்ளது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



# சாகா வரம் பெற்ற நடிகையர்திலகம் சாவித்திரி




1950, 60 மற்றும் 70-களில் சகாப்தமாக வாழ்ந்தவர், நடிகை சாவித்திரி. தமிழ், தெலுங்கு,இந்தியில் 318 படங்களில் குடும்பப்பாங்கான வேடங்களில் நடித்து ஒட்டுமொத்த ரசிகர்களையும் ஈர்த்து வைத்து இருந்தார்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ரங்காராவ் ஆகியோருடன் பல படங்களில் நடித்து இருந்தார். பாசமலர் படத்தில் பாசக்கார தங்கையாகவும், திருவிளையாடலில் சக்தியே பெரிது என்று வாதாடும் ஈசனின் மனைவியாகவும், படித்தால் மட்டும் போதுமா படத்தில் அன்பான மனைவியாகவும் கவர்ந்தார். பாவமன்னிப்பு, நவராத்திரி, கர்ணன், களத்தூர் கண்ணம்மா,பரிசு, கந்தன் கருணை, மாயாபஜார் உள்ளிட்ட பல படங்கள் சாவித்திரியின் திறமையான நடிப்பில் வெளிவந்து வசூல் சாதனை படைத்தன. நடிகையர் திலகம்சிறந்த நடிப்பால் 'நடிகையர் திலகம்' என்ற பட்டம் அளித்து பாராட்டப்பட்டார். நடிகர் ஜெமினி கணேசனை காதல் திருமணம் செய்து கொண்டார். படங்களை டைரக்டும் செய்தார். சென்னையில் மாளிகை போல் வீடு கட்டி அதற்குள் நீச்சல் குளம் அமைத்த முதல் நடிகை இவர்தான். கதாநாயகியாக இருந்தபோது செல்வ செழிப்பில் புகழின் உச்சியில் இருந்த அவர் கடைசி காலத்தில் சினிமா தயாரிப்பில் பணத்தை இழந்து உடல் நலம் குன்றி கஷ்டப்பட்டு இறந்தார்.

நடிகையர்திலகம் சாவித்திரி பற்றி நடிகர் சிவகுமார் அவர்கள் இப்படிக் கூறுகின்றார்.

எனது 10-வது வயதில் "தேவதாஸ்" படம் பார்த்தேன். பார்வதி - தேவதாஸ் இரண்டு அமர காதலர்களின் உடல்களும் ஒரே சிதையில் தீ மூட்டப்படுவது கடைசிக் காட்சி.

படம் பார்த்துவிட்டு தாரை தாரையாக கண்ணீர் விட்டவாறு சூலூரிலிருந்து 3 கி.மீ.தூரமுள்ள என் கிராமத்துக்கு இரவில் நடந்தே போனேன்.

அன்று பார்வதியாக நடித்த சாவித்திரியை என் சகோதரியாக வரித்துக் கொண்டேன். வணங்காமுடி - பாசமலர் - நவராத்திரி - கொஞ்சும் சலங்கை - கை கொடுத்த தெய்வம்- என்று எத்தனை படங்கள் , எத்தனை விதமான வேடங்கள்!!.."பாச மலர் "- கிளைமாக்ஸில் பார்வையிழந்த சிவாஜியைத் தேடி மகளுடன் சாவித்திரி வருவார். "எங்கண்ணா போயிட்டீங்க? - என்று கதறுவார்" நீ கிழிச்ச அன்பு வட்டத்தை தாண்டி என்னால எங்கயும் போகமுடியலம்ம என்று சொல்லும்போதும், "கை வீசம்மா கை வீசு.. கடைக்குப்போகலாம் கை வீசு.." என்று பாடி அழுத போதும் தமிழகத் தியேட்டர்கள் ரசிகர்களின் கண்ணீரில் மிதந்தன..

"சரஸ்வதி சபதம் - கலைவாணி கந்தன் கருணையில் முருகன் அன்னையாக என்னோடு நடித்தவர், பின்னாளில் "புது வெள்ளம்" - படத்திலும் என் அம்மாவாக நடித்தார்..



**நடிகர் சிவகுமாரின் 100– வது படமான ரோசப்பூ ரவிக்கைகாரி பட விழாவுக்கு வந்து மாலை அணிவத்த நடிகையர் திலகம்**

காதல் மன்னன் ஜெமினிகணேசனுடன் பல படங்களில் ஜோடியாக நடித்தவர். நிஜவாழ்விலும் அவருக்கு ஜோடியானவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் உடன் வேட்டைக்காரன் படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தவர்.




"பரிசு"










கால வெள்ளத்தில் அவரே படம் தயாரித்து, இயக்கி, நடித்து, தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து - காலம் அவரை கடுமையாகத் தண்டித்தது..

அந்தச் சூழலிலும் என் 100- வது பட விழாவுக்கு வந்து மாலை அணிவத்து உச்சி மோர்ந்தார் அந்த அன்புச் சகோதரி நடிகையர் திலகம் !!!

நடிகர் சிவகுமார் பதிவில் இருந்து.





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின் மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Dortmund நகரில்
Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00 bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 UhrSonn. und Feiertags: Geschlossen



மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
info@milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# என்னை நோக்கி பாயும் தோட்டா



தனுஷ் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'என்னை நோக்கி பாயும் தோட்டா'. கௌதம் மேனன் இயக்கி வரும் இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்து வருகிறார்.

விறுவிறுப்பாக நடந்து வந்த இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

கடைசி கட்டமாக மும்பையில் படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டுள்ளனர். அங்கு இரண்டு வாரங்கள் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்தவுள்ளனர்.

படத்தின் முக்கியமான காட்சிகளை மும்பையில் படமாக்க இருக்கின்றனர். காதல் படமாக உருவாகி வரும் இதில் தனுஷ் மீசை தாடி இல்லாமல் மிகவும் அழகாக தோற்றமளிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்த பிறகு கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தனுஷ் நடிப்பில் 'தொடரி', 'கொடி' ஆகிய படங்கள் விரைவில் வெளியாகவுள்ளன.

# கபாலி கதை வந்த கதை



ரஜினி நடிப்பில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படம் 'கபாலி'. தமிழ் சினிமாவில் இரண்டு படங்களே இயக்கிய பா.ரஞ்சித் என்ற இளம் இயக்குனரின் படத்தில் ரஜினி எப்படி நடிக்க ஒப்புக் கொண்டார் என்பது அனைவரையும் இன்னமும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது. அந்த வகையில் 'கபாலி' படம் எப்படி ரஜினி வசம் சென்றது. அவர் எப்படி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார் என்பது பற்றிய புதிய தகவல்களை ரஜினியின் இளைய மகள் சவுந்தர்யா வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து சவுந்தர்யா கூறும்போது, நான் வெங்கட் பிரபுவிடம் உதவி இயக்குனராக 'கோவா' படத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ரஞ்சித்தின் அறிமுகம் கிடைத்தது. அவருடைய முதல் படமான 'அட்டக்கத்தி'-ஐ நான் தயாரிக்கும் வாய்ப்பு வந்தது. ஆனால், ஒருசில காரணங்களால் அது முடியாமல் போனது.

அதன்பிறகு, 'மெட்ராஸ்' படம் வெளிவந்த பிறகு, அந்த படத்தை பார்த்துவிட்டு அப்பா ஒருநாள் என்னை அழைத்து 'மெட்ராஸ்' படம் மிகவும் நன்றாக உள்ளது என்று கூறினார். உடனே, எனது மனதுக்குள் ரஞ்சித்தும், அப்பாவும் சேர்ந்து பணியாற்றினால் எப்படி இருக்கும் என்ற எண்ணம் ஓடியது.

பிறகு, ரஞ்சித்தை ஒருநாள் சந்தித்து அப்பாவுக்கு ஒரு கதை பண்ணுகிறீர்களா? என்று கேட்டதும், அவர் உறைந்தே போய்விட்டார். சில நாட்கள் கழித்து ரஞ்சித், என்னிடம் வந்து அப்பா நடிக்கும் படத்தில் அவர் 'மலேசியா டானா'க வருகிறார் என்று சொன்னதும், அதுவே போதுமானதாக இருந்தது. இதை அப்பாவிடம் போய் சொன்னேன். அவருக்கும் பிடித்திருந்தது. அதுதான் இன்றைய 'கபாலி' என்று கூறினார்.

# கவர்ச்சிக்குத் தடை கல்யாணம்!




நடிகை சமந்தாவுக்கு திருமணம் முடிவாகி உள்ளது. ,இளம் நடிகர் ஒருவரை விரைவில் மணந்து கொள்வேன் என்று அவர் அறிவித்து ,இருந்தார். அந்த நடிகர் தற்போது அவர் நடிகர் நாகசைதன்யா என்று தெரியவந்துள்ளது. ,இவர் தெலுங்கு பட உலகில் முன்னணி கதாநாயகனாக ,இருக்கிறார். நடிகர் நாகார்ஜனாவின் மகன் ஆவார். சமந்தாவும், நாகசைதன்யாவும் தெலுங்கு படத்தில் ஜோடியாக நடித்தனர். அப்போது ,இருவருக்கும் காதல் மலர்ந்தது. நாகசைதன்யாவின் தாயார் சமீபத்தில் சமந்தாவின் வீட்டுக்கு நேரில் சென்று ஒருநாள் முழுவதும் அவருடன் தங்கி ,இருந்தார். அப்போது சமந்தாவின் நடவடிக்கைகள் அவருக்கு பிடித்து விட்டதால் திருமணத்துக்கு முழு சம்மதத்தை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சமந்தா படங்களில் கவர்ச்சியாக நடிப்பதற்கு நாகசைதன்யா குடும்பத்தினர் தடை விதித்துள்ளனர்.ஏற்கனவே பல படங்களில் சமந்தா கவர்ச்சியாக நடித்து ,இருந்தார். சூர்யாவுடன் “அஞ்சான்“ படத்தின் பாடல் காட்சியொன்றில் துணிச்சலாக நீச்சல் உடையில் தோன்றி பரபரப்பு ஏற்படுத்தினார். நாகசைதன்யா வசதியான பாரம்பரிய குடும்பத்தில் ,இருந்து வந்தவர். ,இவரது தாத்தா நாகேஸ்வரராவ் பழம்பெரும் நடிகர் ஆவார்.

சமந்தாவும் காதலர் குடும்பத்தினர் கவுரவத்தை காப்பாற்ற கவர்ச்சியாக நடிப்பதில்லை என்று முடிவு எடுத்துள்ளார்.

Hückelhoven நகரில்
Asiatischer Super markt
Vijay tv agent
ஆசியா சமுத்திரம்
பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
VIJAY
R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbac
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan
துரித பணமாற்றுச் சேவை
Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS
ஸ்ரீ கம் காமாட்சி அம்பாள் தேர்த் திருவிழாவில் 03.07.2016
VIJYA Tv Smart card
Lyca Tv Box
யாவும் சிறப்பு விலையில்..
VIJAY

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
VALUTRANS Money Transfer
துரித பண மாற்றுச் சேவை!
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com

Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
HP:0173 1937 325
Tel:02102 844744
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS Money Transfer
உரிமையாளர்:
பா. கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

வீட்டுக்கடன்
1,2%
01.06.2016
வட்டிவீதத்திலிருந்து
நீங்கள் புதிய மனை
அமைக்கவோ, கடன் பெறவோ,
எதுவானாலும் உடனடி உதவி
எங்களிடம் உண்டு
தற்போதைய வீட்டுக்கடனை
அல்லது (தனிநபர்)கடனை
குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"
தொடர்புகளுக்கு:
gothab Finance 0231/53375365 0152/53961138
Rheinische Str. 72, 44137 Dortmund 0231/10876361 Th. Gobinath

SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany